பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 23 | புதன்கிழமை | 06.03.2024 | கதிர் 120

# 40 லட்சம் மாணவர்கள் வாழ்வில் விளையாடுகிறது உயர் நீதிமன்றம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றில் நேற்றுக் காட்டம்

உயர்நீதிமன்றம்நாட்டிலுள்ள 40 இலட்சம் மாணவர்களுடனே விளையாடிக்கொண்டிருக்கிறது எனகல்விஅமைச்சர்சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குபதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தனது கேள்வியில், மாத்தளை தம்புள்ளை தேர்தல் தொகுதியில் உள்ள தேவஹுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு 38 வருடங்களாக கணித ஆசிரியர் ஒருவர் இல்லை. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

வடக்கின் பெரும்போர் துடுப்பாட்ட போட்டி நாளை தொடங்கவுள்ளது. ஆனால் அது பற்றி ஊடகங்களுக்குத் தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்கிறார்கள் எமது செய்தியாளர்கள். வழக்கமாக இந்தப் போட்டி பற்றிய தகவல்கள், படங்கள் அனைத்தும் ஊடகங்களுக்குத் தேடித் தேடி அனுப்பி வைக்கப்படும். ஆனால் இம்முறை அது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணம் மத்திய கல் லூரிக்கும் யாழ்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான, வடக்கின் பெரும்போர் என்ற இந்தப் போட்டி 117வருட பாரம்பரியத்தைக்கொண்டது. இந்தப் போட்டியைக் கண்டு களிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்தும், ☞ 2

## விழிப்புணர்வு கலந்துரையாடல்கள்

இலங்கையில்தேசியநல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் உத்தேச 'உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டத்தின்' வரைவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இரண்டு விசேட கலந்துரையாடல்கள்அண்மையில்கொழும்பில் நடைபெற்றன.

அவற்றில் ஒரு கலந்துரையாடல் ஹிமாலயன்குழுவின்பிரதிநிதிகள் மற்றும்சிவில்சமூகஅமைப்புகளின் ☞ 8

# மாணவர் போராட்டத்தால் கொழும்பில் நேற்று பதற்றம்

கொழும்புபல்கலைக் கழகத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது,பேராதனை பல்கலைக்கழகமாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்கொழும்புபல்கலைக் கழகத்திற்கு முன்பாக போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலவசக் கல்வி, சுகாதாரம்உள்ளிட்டபொது மக்களைப் பாதிக்கும் அடிப்படை உரிமைகள் அரிக்கப்பட்டதைத் தடுக்கும் நோக்கில் இந்தப் போராட்டம்நடத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ளபல்வேறுபல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னதாக, பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்ட பேரணியை நிறுத்துமாறு உத்தரவிடக் கோரி, கொழும்புபிரதான நீதிவான்பிரசன்னஅல்விஸிடம் நேற்று காலை கறுவாத்தோட்டபொலிஸார் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும் அந்த கோரிக்கையை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார்.

இ ந் த ☞ 2

# மத்திய வங்கி சம்பள அதிகரிப்பு: கட்சித் தலைவர்கள் கடும் கவலை

## அதிகாரிகளிடம் சரமாரியாகக் கேள்வி

சுயமான தீர்மானத்துக்கு அமைய பணியாளர்களின் சம்பளத்தை அதிகரித்தமைதொடர்பில் மத்தியவங்கியின் உயர் அதிகாரிகளிடம் நேற்று நாடாளுமன்றத்தில்நடைபெற்றகட்சித்தலைவர்கள் கூட்டத்தில்கடும்அதிருப்தி வெளியிடப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தனவின் தலைமையில் நடைபெற்றகட்சிதலைவர்கள் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், மத்திய வங்கியின் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னர் நடைபெற்றநாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்தில்எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல வி டு த் த ☞ 2

# சொத்து விவரங்களை அறிவிக்கவேண்டியோர் யார் யார்?

1988ஆம்ஆண்டின் 74 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1975 ஆம் ஆண்டின் 01 ஆம்இலக்கசொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள்மற்றும்பொறுப்புகள் குறித்து அறிவிக்க வேண்டிய அதிகாரிகள் மற்றும் தனிநபர்களின் பிரிவுகளுக்கு

மேலதிகமாக, 2023 ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல்எதிர்ப்புச்சட்டத்தின் பிரிவு 80 இன் ஊடாக மேலும் அதிகாரிகள் மற்றும் தனிநபர்களின் பல பிரிவுகள் ஊடாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை ☞ 8

# அதிகாரிகளை கண்டபடி விமர்சிப்பது நாடாளுமன்றில் அதிகரித்துவிட்டதாம்

## சபாநாயகர் நேற்று கவலை தெரிவிப்பு

சில நாடாளுமன்ற உறுப்பினர்களினால் அரசின் பல்வேறு உயர் பதவிகளை வகிக்கும் அதிகாரிகள் தொடர்பில் எவ்வித அடிப்படையும் இன்றி, உறுதிப்படுத்த முடியாத விடயங்களின் அடிப்படையிலும் தமது தனிப்பட்ட நலன்களுக்காக அவர்களது கடமைசார்ந்த தீர்மானங்கள்மற்றும் நடவடிக்கைகளை சவாலுக்குட்படுத்தி இந்த உயர் சபையில்பல்வேறுசந்தர்ப்பங்களில் விமர்சிக்கும் போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதைநாடாளுமன்ற உறுப்பினர்களின்கவனத்திற்குகொண்டுவருவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுகாலைசபாநாயகர் தலைமையில் தொடங்கியபோது, சபாநாயகர் அறிவிப்புநேரத்தில்அவர் இதனைத் தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

# ஜனாதிபதி பற்றிய கார்ட்டூன்களின் தொகுப்பு நூல் நாளை வெளியீடு

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறும் கடினமான பணியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முக்கியமான வகிபாகத்தை கேலிச்சித்திரக் கலைஞர்கள் எப்படி நோக்கினார்கள் என்பதை வெளிப்படுத்தும் பிரஸ் எதிர் பிரஸிடன்ட் ('Press Vs.Prez')நூல்வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நாளை வியாழக்கிழமைமாலை 4.00 மணிக்கு கொழும்பு தாமரைத்தடாகஅரங்கில் நடைபெறும்.

ஐக்கிய தேசியக் கட்சி தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவினால் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. 2021 ☞ 8

# நிகழ்நிலை காப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும்

## பிரிட்டன் வலியுறுத்து

நிகழ்நிலைக்காப்பு சட்டமானது அனைத்துவித வெளிப்படுத்தல்களையும் குற்றமாக்கக்கூடியதும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீது மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதுமான சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. எனவே இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளுக்கு ஏற்புடைய வகையில் அச்சட்டத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இலங்கையிடம் வலியுறுத்துகின்றோம் என்று பிரித்தானியாவின் சர்வதேச தூதுவர் ரீட்டா ஃப்ரென்ஷா தெரிவித்தார்.

ஐக்கியநாடுகள்மனித உரிமைகள்பேரவையின் 55ஆவது அமர்வில் பிரித்தானியா, கனடா, வட மெசிடோனியா, மாலாவி, மொன்டெனேக்ரோ ஆகிய இலங்கை குறித்த தீர்மானத்தின் இணையனுசரணை நாடுகளின் சார்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 9

# நல்லிணக்க முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவு வழங்கும்

## ஐ.நாவில் அதன் பிரதிநிதி தெரிவிப்பு

உண்மை மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவுக்கான உள்ளகப் பொறி முறையை நிறுவுதல் உள்ளடங்கலாக இலங்கை ஆளும் தரப்பால் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவு வழங்குமென அந்நாட்டுப் பிரதிநிதி ஐ.நா மனித உரிமைகள்பேரவையில் தெரிவித்துள்ளார்.

அங்கு ஜப்பான் சார்பில் உரையாற்றிய பிரதிநிதிதெரிவித்ததாவது:

உலகளாவியரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வழங்கிவரும் பங்களிப்பை தாம் பெரிதும்பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி உலகின்அனைத்துநாடுகளும்மனிதஉரிமைகள், சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சி ஆகியகோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கவேண்டியது அவசியம்எனவும்அவர் வலியுறுத்தினார்.

அதேபோன்று இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நல்லிணக்கத்தைக் ☞ 9

# பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் சபாநாயகர் அரசமைப்பை மீறினார்

## ஜே.வி.பி. சபையில் குற்றச்சாட்டு

பொலிஸ் மா அதிபர் நிமயனத்தில்சபாநாயகர் அரசமைப்புக்குமுரணாக நடந்துள்ளார் என்று மக்கள்விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நேற்று இடம்பெற்ற பிணைப் பொறுப் பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் உள்ளிட்ட நிதித்துறையுடன் தொடர்புடைய சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் ☞ 8

# இல்லத்தரசிகளை எதற்காகவும் குறைத்து மதிப்பிடவேண்டாம்

## கீதார குமாரசிங்க எம்.பி. வலியுறுத்து

ஒவ்வொரு சேவையை போன்று தமதுவீட்டில்சகலவேலைகளையும்முன்னெடுக்கும் இல்லத்தரசிகளை எந்த காரணத்திற்காகவும் குறைவாக மதிப்பிட வேண்டாம் என பெண்கள் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் எட்டாம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அது தொடர்பாகத் தெளிவுபடுத்து ☞ 9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வெளி மாவட்டங்களில் இருந்தும் பழைய மாணவர்கள் வருவார்கள். ஒரு பிராந்தியக் கொண்டாட்டமாக, பண்பாட்டு நிகழ்வாகப் போட்டிய அரங்கேறும்.

இதனால் இந்தப் போட்டிகள் ஊடகங்களில் முக்கியத்துவப் படுத்தப்படுவதுவழமை. போருக்குப் பின்னரான காலங்களில் இந்தப் போட்டி ஊடகங்களில் முக்கியத்துவப்படுத்தப்படுவதை இரு கல்லூரிகளுமே அதிகளவில் ஊக்கப்படுத்தி வந்திருக்கின்றன. இதற்காக செய்தியாளர்கள் சந்திப்புக்கள் தனியாக நடத்தப்படும் அதில் இரு கல்லூரி வீரர்களும் அறிமுகப்படுத்தப்படுவார்கள். வெற்றிக் கோப்பையும் இரு அணித் தலைவர்களாலும் அறிமுகப்படுத்தப்படும். போட்டிகளில் பார்வையாளர்கள் பின்பற்றவேண்டிய விதிமுறைகள் தொடர்பில்இருகல்லூரிஅதிபர்களால் அறிவிக்கபடும்.

இதில் எந்தவொரு விடயமும் இந்த வருடம் இடம்பெறவில்லை. நீண்டகாலமாக இருந்து வந்த பாரம்பரியம் அப்படியே வேரோடு பிடுங்கிப் போடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தப் போட்டிக்கான நிதி அனுசரணையை தெற்கில் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று வழங்கியுள்ளதாகவும் அந்த நிறுவனம் தனது விளையாட்டு இணையத்தளத்தை பிரபலயப்படுத்துவதற்காக போட்டி பற்றிய தகவல்கள் வேறு எந்த ஊடகங்களிலும் வெளியாகக்கூடாது என்று தடுத்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த முடியாது என்கிறபோதும் போட்டி தொடர்பில் ஊடகங்களுக்கு எந்தவொரு அறிவிப்பும் விடுக்கப்படவில்லை என்பது மட்டும் 100 சதவீதம் உறுதி.

ஊடகங்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை யாழ்.மத்திய கல்லூரி பொறுப்பெடுத்ததிருந்தது. அங்கு ஏற்கனவே அதிபர் தொடர்பான குழப்பங்கள் இருப்பதால் இந்த விடயத்தில் கவனம்செலுத்தப்படாமல் இருந்திருக்கவும் வாய்ப்புக்கள் உண்டு. இருப்பினும் அதிபரைத் தாண்டி இந்த விடயத்தில் அக்கறையுள்ள பலர் தொடர்புபட்டிருக்கிறார்கள் அவர்களாவது அதில் கரிசனை காட்டியிருக்கலாம்.

அனுசரணையாளர்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஊடகங்கள் புறக்கணிக்கப்பட்டன என்றால் அதுவும் உள்ளூர் ஊடகங்கள் ஒதுக்கப்பட்டன என்றால் அது மிக மோசமானதொரு செயல். தொலைக்காட்சி உரிமம் விற்கப்படுவதும், அதை வேறு யாரும் ஒளிபரப்பக்கூடாது என்று சொல்வதும் நியாயமானதாக இருக்கலாம், ஆனால் செய்திகளையே தடுப்பது என்பது உலகில் எங்கும் நடக்காத விநோதம். அது மட்டுமல்ல போர்க் காலங்களிலும் அதன் பிறகும்கூட உள்ளூர் ஊடகங்கள்தான் இந்தப் போட்டிகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கி வந்திருக்கின்றன. அப்படித் தம்மோடி தோளோடு தோள் நின்ற ஊடகங்களை,வெறும்பணத்துக்காக புறந்தள்ளுவது என்பது எப்போதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

போட்டிக்கு அனுசரணை வழங்குபவர்கள் தங்கள் நலன்களுக்காக 117 வருட பாரம்பரியத்தை மாற்றுவதற்கு இரு கல்லூரி நிர்வாகங்களும் துணை போயிருப்பின் அது பெரும் தவறு. கண்டிக்கத்தக்கது. போட்டி பற்றிய செய்திகளை மக்களும் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் அறிவதைத் தடுப்பது அறிவுசார் சமூகத்திற்குப் பொருத்தமான செயல் அல்ல.

இந்தத் தவறு உடனடியாக நிவர்த்திக்கப்படவேண்டும். வடக்கின் பாடசாலைப் பாரம்பரியங்களில் ஒன்றின் வீழ்ச்சிக்கு இதுவே காரணமாகிவிடக்கூடாது.

................................

ஏப்ரல் மாதத்தில் நாடு திரும்பத் திட்டமிட்டிருந்த பஸில் ராஜபக்ச, நாட்டின் அரசியல் களநிலை கருதி உடனடியாக நாடு திரும்புவார் என்று நான் ஏற்கனவே சொன்னமாதிரி நேற்று அவர் நாடு திரும்பிவிட்டார். கட்டுநாயக்காவில் அவருக்குப் மொட்டுக் கட்சியினர் பெரும் வரவேற்புவழங்கினர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும்கூட அங்கு திரண்டிருந்தனர். மொட்டுக்கட்சியில் இருந்தாலும் தற்போது ரணிலுக்கு ஆதரவாக இருக்கக்கூடியவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் அவர்களில் ஒருவர்.

கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம், எஸ்.எம். சந்திரசேன, ரோகித்த அபேயகுணவர்த்தன, அருந்திக்க பெர்னான்டோ ஆகியோரும் பஸிலை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். கட்சிக்குள் பஸிலின் செல்வாக்கு என்ன என்பதை நேற்று விமான நிலையத்தில் காணக்கூடியதாக இருந்தது. பஸிலின் வருகையுடன் அரசியல் களம், குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் களம் இன்னும் சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் எவரும் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என வந்ததுமே பஸில் ஒரு போடு போட்டார். அதன் மூலம் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டும் என்று கட்சிக்குள் ஒரு தரப்பினர் மேற்கொள்ளும்நகர்வுகளுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் வாய்ப்புள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் அதற்கான தேர்தலும் நடக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். எந்தத் தேர்தலானாலும் அதில் போட்டியிடத் தயார் என்றும் அறிவித்திருக்கிறார். ரணிலுக்கும் மொட்டுக் கட்சிக்கும் இடையிலான கருத்தியல் மோதல்கள் வலுத்து வரும் நிலையில் பஸில் வந்து சேர்ந்திருக்கிறார். கோட்டாபய ராஜபக்சரணிலிடம்தூக்கிக்கொடுத்த பதவியை பஸில் அவரிடமிருந்து பிடுங்கி எடுப்பாரா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் மொட்டுக் கட்சியினர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 40 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறே புத்தல கோனகங்ஆர கனிஷ்ட வித்தியாலயத்திற்கு தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் எவரும் இல்லை. பிரபஞ்சம் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அண்மையில் மேற்குறிப்பிட்ட குறித்த பாடசாலைகளுக்குச் சென்ற போதே இவை அனைத்தும் அம்பலமானது. எமது நாட்டில் 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இதனை நிவர்த்தி செய்வதற்கு 22 ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றிய சேவையினைப் பாராட்டி, முறையான வழிமுறையில் அவர்களை ஆசிரியர் துறையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

அதற்கு தொடர்ந்து அமைச்சர் சுசில் பதிலளித்தார். அவர் தெரிவித்ததாவது:

2019ஆம் ஆண்டு பட்டதாரிகள் அபிவிருத்தி அதிகாரிகளாக இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களில் 22 ஆயிரம் பேர் அவர்களின் பட்டத்துக்கமைவாக பாட ஆசிரியர்களாக நியமிக்காமல் எந்த வகைப்படுத்தலும் இல்லாமல் பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆரம்ப பிரிவுகளுக்கே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் நான் இந்த அமைச்சை பொறுப்பேற்கும்போது இந்த 22ஆயிரம் பேருக்கும் பயிற்சியளிக்கப்பட்ட நியமனம் வழங்கி, 3 வருடத்துக்கு பின்னர் பரீட்சை நடத்தி நிரந்தர நியமனம் வழங்கவேண்டி இருந்தது.

இந்த நடவடிக்கை ஆசிரியர் சேவை யாப்புக்கமைய ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் முறைமைக்கு முரணாகும். அதனால் இதனை சரி செய்யும் வகையில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, இந்த 22 ஆயிரம் பேருடன் ஏனைய அபிவிருத்தி அதகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், புதிதாக ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பம் கோரி இருந்தோம். அதன் பிரகாரம் 52 ஆயிரம் விண்ணப்பங்கள் எமக்கு கிடைத்தன. அவர்களை ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்ய போட்டிப் பரீட்சை நடத்த நடடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக சிலர், தாங்களும் பயிற்றப்பட்டவர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தங்களுக்கும் அதற்கான நியமனத்தை வழங்குமாறு தெரிவித்து நீதிமன்றம் சென்றனர்.

இந்தப் பரீட்சையை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்ற நிலையில் கடந்த வருடம் மார்ச் 25 பரீட்சை நடத்த இரண்டுதினங்கள் இருக்கும்போது, உயர் நீதிமன்றம் பரீட்சை நடத்த இடைக்கால தடை உத்தரவு வழங்கியது. இவ்வாறு தடை உத்தரவு வழங்கி தற்போது ஒருவருடத்தை நெருங்கி இருக்கிறது. நீதிமன்றம் செயற்படுவது நாடாளுமன்றம் ஊடாக மேற்கொள்ளப்படுகிறன சட்டத்துக்கமையவாகும். உயர் நீதிமன்றத்துக்கு தேவையான நீதிபதிகளை நாங்கள் வழங்கி இருக்கிறோம். ஆனால் இந்த பரீட்சைக்கு தடை உத்தரவு வழங்கி ஒருவருடாகியும் இன்னும் தீர்ப்பு வழங்காமல் இருக்கிறது.

இந்த வழக்கை விசாரித்துவந்த நீதிபதிகளில் ஒருவர் ஓய்வு பெற்றுச் செல்லசிலதினாங்கள் இருக்கும்போது, இந்த வழக்கு தொடர்பாக தீர்ப்பொன்றை வழங்குமாறு நான் எனது சட்டத்தரணிகள் ஊடாக கோரி இருந்தேன். ஆனால் தீர்ப்பு வழங்கப்படவில்லை. தற்போது அந்த நீதிபதி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். அதனால் மீண்டும் மனுஒன்றைதாக்கல்செய்து, குறித்த வழக்கு தொடர்பாக கேட்கவேண்டி ஏற்பட்டுள்ளது. அதனால் உயர் நீதிமன்றம் இந்த நாட்டு 40 இலட்சம் மாணவர்களுடனே விளையாடிக்கொண்டிருக்கிறது.

இந்த அபிவிருத்தி அதிகாரிகளுக்கு ஆளும் தரப்பால் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆரோக்கியமான மற்றும் சமமான கல்வியை வழங்கவேண்டும் என்பது சட்டம். அதற்காகவே ஆசிரியர் சேவை யாப்பில் இந்த விடயங்கள் இருக்கின்றன.

மாணவர்களுக்கு ஆரேராக்கியமானசிறந்தகல்விவழங்குவதற்கே போட்டிப் பரீட்சை நடத்த நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். ஆனால உயர் நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கி ஒரு வருடமாகி உள்ளது. இந்த நிலை தொடருமானால் நாடாளுமன்றத்துக்குப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து இது தொடர்பாக விசாரணை நடத்த நடவடிக்கை எடுப்போம். அதனால் மாணவர்களுக்கு சிறந்த ஆசிரியர்களை வழங்குவதை தடுக்கும் அநியாயத்தை நீதிமன்றம் செய்யக்கூடாது. காணி வழக்கும் என்று நினைத்துக்கொண்டே இவர்கள் இந்த வழக்கு விசாரணையை இழுத்துக்கொண்டு செல்கின்றனர். எனவே உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு வழங்கி நாட்டில் இருக்கும் 43 இலட்சம் மாணவர்களையும் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் நியமங்களுக்கு அமையவே நாங்கள் செயற்பட வேண்டி இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அதனால் இந்த நிலைமையை மாற்றியமைப்பதென்றால், நாடாளுமன்றம் ஊடாக எமக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படுகிறது. அதற்கு நான் பின்வாங்கப்போவதில்லை. அதனால் இன்னும் சில காலத்துக்கு பொறுத்துக்கொண்டு இந்த வழக்கு தீர்ப்பு விரைவாக வழங்குமா இல்லையா என எதிர்பார்து இருக்கிறேன் என்றார்.

## மத்திய வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளுக்கு அமைய கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய மத்திய வங்கி சட்டமூலத்தில் சுயாதீனதீர்மானமாக சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் இருந்த போதிலும், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய குறித்த விடயத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற காரணத்தினால் இவ்விடயம் சட்டமூலத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்படி, புதிய சட்டத்தில் மத்திய வங்கியின் பணிகளை சுயாதீனமாக மேற்கொள்ள ஏற்பாடுகள் உள்ள போதிலும், சுயாதீன தீர்மானத்தின் அடிப்படையில் சம்பளத்தை அதிகரிக்க எந்தவொரு இடத்திலும் அதிகாரம் இல்லையென அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள், சட்டத்தின் 5, 8 மற்றும் 23ஆவது பிரிவுகளில் அதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகவும், நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பில் சகல செலவீனங்களையும் ஈடுசெய்வதற்கு மத்திய வங்கியின் நிதியத்தைப் பயன்படுத்த சட்டத்தில் இடமிருப்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

செலவீனங்கள் தொடர்பில் சட்டத்தில் ஏற்பாடுகள் இருந்த போதிலும், சம்பளம் தொடர்பில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் இல்லையென கட்சித்தலைவர்கள் சுட்டிக்காட்டினர். சட்டத்தின் 23ஆவது பிரிவுக்கு அமைய சம்பள அதிகரிப்பை தீர்மானிக்கும் உரிமை அவர்களுக்கு இருந்தாலும் அதற்கான இறுதி அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளதாக கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் செலவுகள் மத்திய வங்கி நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் என்றும், ஒருங்கிணைந்த நிதியில் இருந்து அல்ல என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் நிதியைப் பயன்படுத்துவதற்கு இந்தச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் நீண்ட நேரம் விடயங்களை விளக்கினர்.

மத்திய வங்கியின் நிதியம் இறுதியில் மக்களின் நிதியாக இருப்பதால் அது தொடர்பில் மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும், அதற்கமைவாகப் பொது நிதிக்கு பொறுப்பான நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை எனவும் கட்சித் தலைவர்கள் வாதிட்டனர்.

தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகத்திற்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்துக்கு அமைய ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையும் இவ்வாறு சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதாகவும், முன்னைய வருடங்களிலும் இது சம்பிரதாயமாக மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். எதுவாக இருந்தாலும், இவ்வாறான ஒப்பந்தத்தை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு தொழில் அமைச்சில் பதிவுசெய்ய வேண்டும் என்றும், அவ்வாறான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றும் கேள்வியெழுப்பப்பட்டது.

எனினும், அவ்வாறான அனுமதி எதுவும் பெறப்படவில்லையென அதிகாரிகள் குறிப்பிட்டனர். தொழில் அமைச்சில் பதிவு செய்வதன் மூலம் மாத்திரமே இவ்வாறான கூட்டு ஒப்பந்தமொன்றை செயற்படுத்த முடியும் எனவும் கட்சித் தலைவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இருந்தபோதும், புதிய சட்டத்தின் ஊடாக மத்திய வங்கியை சுயாதீனப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது சுயாதீனமான முடிவுகள் எடுத்து சம்பளத்தை அதிகரித்துக்கொள்வது அல்ல என்றும், அரசியல் தலையீடுகள் இன்றி நாட்டின் பொருளாதாரம் தொடர்பான சரியான கொள்கைகள் வகுக்கப்படும் என்பதேயாகும் எனக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஏதாவது ஒருவிதத்தில் சட்டத்தின் ஊடாக அனுமதி இருந்தாலும், நாடும் நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உணர்வற்ற வகையில் இவ்வாறு சம்பள அதிகரிப்பை மேற்கொள்வது தார்மீகப் பொறுப்பற்றது என்றும், இதனை அனுமதிக்க முடியாது என்றும் கட்சித் தலைவர்கள், மத்திய வங்கியின் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

ஒரு பிரிவினருக்கு மாத்திரம் இந்தளவு வரப்பிரசாதங்களை வழங்குவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதது என்றும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன், இந்த சம்பள அதிகரிப்பின் காரணமாக மாதமொன்றுக்கு மேலதிகமாக ஏறத்தாள 232 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாகவும் இங்கு தெரியவந்தது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன் 23 ரணில் விக்கிரமசிங்க 9ஆவது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட தினம் முதல் தேசிய தலைமைத்துவ பயணம் வரை பத்திரிகைகளில் வெளியான சுமார் 600 கார்ட்டூன்களைத் திரட்டி இந்தப் நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

40 கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் சுமார் 20 பத்திரிகையாளர்கள் இந்த நூலுக்கு பங்களித்துள்ளனர், கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர்களும் இந்த விழாவின் போது கௌரவிக்கப்பட உள்ளனர்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் இந்திய கேலிச்சித்திரக்கலைஞர் நாலா பொன்னப்பா விசேட விருந்தினராக பங்கேற்கவிருப்பதுடன், சிறப்புரையும் ஆற்றவுள்ளார்.

பேராசிரியர் ரொஹான் நெத்தசிங்க நூலாய்வு நிகழ்த்த உள்ள அதேவேளை இந்த நிகழ்விற்கு முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், மாணவர்;கள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகில் ஒன்றுகூடி தங்கள் குறைகளை தெரிவித்தனர். வீதியை இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தினர்.

பொலிஸாரின்; உத்தரவையும் மீறி மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். இதையடுத்து, குழுவை கலைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதையடுத்து, போராட்டக்காரர்களை நோக்கு கண்ணீர்புகை குண்டுகளை வீசியும், தண்ணீரை பீய்ச்சி அடித்தும் பொலிஸார் போராட்டத்தினை கட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர்.

## அதிகாரிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அடிப்படையின்றி வெளியிடப்படும் அவ்வாறான அறிக்கைகளினால் மேற்படி அரச அதிகாரிகளின் நற்பெயருக்கும் தொழில் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படுவதோடு, அவ்வாறான கூற்றுக்கள் தொடர்பில் பதிலளிக்கும் வாய்ப்பு அந்த அதிகாரிகளுக்கு இல்லாததனால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதையும் அதைரியமூட்டப்படுவதையும் அவதானிப்பதாக சபாநாயகர் தனது அறிவிப்பில் குறிப்பிட்டார்.

இதுபோன்ற அறிக்கைகள் குறித்து அந்த அதிகாரிகள் தங்களது ஆழ்ந்த கரிசனையைத் தெரிவித்து எனக்கு எழுத்துமூலமாக விடயங்களை முன்வைத்திருப்பது குறித்தும் இங்கு விசேடமாக குறிப்பிட விரும்புவதாகவும் தெரிவித்தார்.

அரச அதிகாரிகள் தொடர்பில் விமர்சனங்கள் இருப்பின், அந்த அதிகாரிகளை நாடாளுமன்றத்திற்கு வரவழைத்து, அதுபற்றி விசாரணைசெய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்புஇருப்பதால், இந்தச்சபையில் அவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவர்களை சவாலுக்குட்படுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அவர் வலியுறுத்தினார்.

நிலையியற் கட்டளை 91(எ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், அவ்வாறான அவதூறு அல்லது தவறான அறிக்கைகளை ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

# கம்பஹா, மினுவாங்கொடை மற்றும் மீரிகம வைத்தியசாலைகளின் சிக்கல்களுக்கு தீர்வு

கம்பஹா, மினுவாங்கொடை மற்றும் மீரிகம வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய விசேட வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களை உடனடியாக வழங்குவதற்கு மேல் மாகாண ஆளுநரும் சுகாதார அமைச்சரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலும், மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் தி எயார்போர்ஸ் ரொஷான் குணதிலக மற்றும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன ஆகியோர் கம்பஹா வைத்தியசாலைக்கு 350 மில்லியன் ரூபா செலவில் ஆய்வு கூடத்தை வழங்கியும் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை பிரிவுப் பணிகளை கூடிய விரைவில் ஆரம்பித்து வைப்பதற்காகவும் மீரிகம வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கும் மேலும் ஒப்புக்கொண்டார்கள்.

கம்பஹா, மினுவாங்கொடை மற்றும் மீரிகம வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறியும் நோக்கில் கடந்த வெள்ளிக்கிழமை கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் இந்த உடன்பாட்டை வெளிப்படுத்தினர். இந்த மருத்துவமனைகளில் வெளி நோயாளர்கள் பிரிவு, நோயாளர்கள் விடுதி, கிளினிக் வளாகம், ஆய்வு கூடம், அவசர சிகிச்சை பிரிவு, சமையலறை உள்ளிட்ட பிரிவுகள் சிறப்பாகக் கண்காணிக்கப்பட்டன.

வைத்தியசாலைக்கு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் முறை, மருந்து தட்டுப்பாடு உள்ளதா, நோயாளர் பராமரிப்பு சேவைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன, வைத்தியசாலையில் செயல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலை, வைத்தியசாலைகளுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களின் தேவைகள் என்பன தொடர்பில் சுகாதார அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

வைத்தியசாலைகளுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், வைத்தியசாலை ஊழியர்களுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், ஊழியர்களின் கடமைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

மூன்று வைத்தியசாலைகளிலும் சிறப்பு மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களின் கனிஷ்ட ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளது என்பது சிறப்பு உண்மை.

நாட்டில் உள்ள ஒவ்வொரு வைத்தியசாலையிலும் விசேட வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களின் பற்றாக்குறையே பிரதான பிரச்சினை எனவும், தேவையான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் போது வெற்றிடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் எனவும், அதற்கேற்ப தேவையான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, புதிய திட்டங்களை ஆரம்பிக்கும் முன்னர் முடிக்கப்படாத அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு தெரிவித்தார்.

நாட்டின் சனத்தொகையில் 11 வீதம் கம்பஹா மாவட்டத்தில் வாழ்கின்றனர். 2023 ஆம் ஆண்டில், 1100 இற்கும் மேற்பட்ட இதய நோயாளிகள் பதிவாகியுள்ளனர். அந்த நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் 50 வயதுக்குட்பட்டவர்கள். ஆய்வு கூடம் இல்லாத காரணத்தினால் நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கம்பஹா வைத்தியசாலை வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கம்பஹா வைத்தியசாலையில் காணப்படும் பிரதான குறைபாடாக உள்ள ஆய்வு கூடம் உடனடியாக வழங்கப்படும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன இங்கு தெரிவித்தார். இதற்குத் தேவையான 350 மில்லியன் ரூபா சுகாதார அமைச்சாலும் ஆளுநரின் தலையீட்டிலும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மினுவாங்கொடை ஆதார வைத்தியசாலையின் எக்ஸ்ரே பிரிவு மற்றும் சேமிப்பு அறையும் ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

தற்போதைய சுகாதார அமைச்சரின் எண்ணக்கருவின் அடிப்படையில் சுகாதார அமைச்சால் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படும் வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கான விசேட வேலைத்திட்டத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் முக்கிய நோக்கம் மருத்துவமனைகளில் உள்ள மனித மற்றும் பௌதீக வளங்களின் குறைபாடுகளுக்கு குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை வழங்குவதும், கிராமப்புற மருத்துவமனை அமைப்பைப் பேணுவதன் மூலம் கிராமப்புற மக்களுக்கு உயர் வசதிகளுடன் கூடிய நோயாளி பராமரிப்பு சேவைகளை வழங்குவதும் ஆகும்.

இந்நிகழ்வில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் விதான, நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (05)

# சாய்ந்தமருது ஒக்ஸ்போர்ட் கல்லூரி ஆண்டு விழாவும், கௌரவிப்பும்







சாய்ந்தமருது ஒக்ஸ்போர்ட் கல்லூரியின் 29 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், மாணவர்கள் விடுகை மற்றும் கௌரவிப்பு நிகழ்வும் கல்லூரி பணிப்பாளர் எஸ். ஜமால்தீன் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயம் பிரதானியும், கிழக்கு மாகாண அனைத்துப் பள்ளிவாசல்கள் பொதுநிறுவனங்கள் சம்மேளன நிறைவேற்று குழு உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்துகொண்டு பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்களின் வகிபாகம், சமூகத்தை நேசிக்கும் தலைவர்கள் இல்லாமல் போனமையால் சமூகம் அடைந்துள்ள துயரங்கள், எதிர்காலத்தில் பிள்ளைகளை சிறந்த தலைவர்களாக உருவாக்க பெற்றோர்கள் செய்யவேண்டிய பணிகள், எதிர்காலம் மீது உள்ள சவால்கள் தொடர்பில் கருத்துரைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளரும், அல்- மீஸான் பௌண்டஷன்-ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், சாய்ந்தமருது பிரதேச முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வை. திருப்பதி, கல்முனை உப பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். ஆயிஷா, அட்டாளைசேனை தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஏ.எம். முபாரக், சியபத பைனான்ஸ் பிராந்திய முகாமையாளர் எம்.எச். எம். பாரீஹ் உட்பட அதிதிகள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்களைப் பாராட்டி அதிதிகளால் மாணவர்களுக்கு சான்றிதழ், நினைவு சின்னங்கள், பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (05)

# களுவன்கேணி பாடசாலை மைதான வீதி, வந்தாறுமூலை வீதி மக்கள் பாவனைக்கு



கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தனின் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்டம் பூராகவும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் வீதிகள் இனம் கண்டு அவற்றை செப்பனிட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் 1.3 கிலோ மீற்றர் நீளமான களுவன்கேணி பாடசாலை மைதான வீதி காபெட் வீதியாகவும், 160ஆ நீளமான வந்தாறுமூலை உள்ளக வீதி கொங்கிரீட் வீதியாகவும் செப்பனிட்டு சம்பிரதாய பூர்வமாக மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்திருந்ததோடு குறித்த வீதிகளை சம்பிரதாயபூர்வமாக மக்கள் பாவனைக்குக் கையளித்திருந்தார்.

இதன்போது களுவன்கேணி ஸ்ரீமுருகன் ஆலய பிரதமகுரு நிமல்ராஜ் சர்மா, வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியாலாளர் எந்திரி யு.லிங்கேஸ்வரன், களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய அதிபர் விராத்தனன், எமது கட்சியின் பிரதம பொருளாளர் தேவராஜன், மாவட்ட அமைப்பாளர் திருநாவுக்கரசு, ஏறாவூர் பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கோணேஸ்வரன், கட்சியின் ஏறாவூர் பற்று பிரதேசக் குழு தலைவர் இராஜேந்திரன் உட்பட முக்கியஸ்தர்கள், ஆர்டிஜி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு நிரந்தர அதிபரை நியமிக்கக்கோரி போராட்டம்

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பாடசாலைக்கு முன்பாக பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மாணவர்கள் ஆகியோர் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நிரந்தர அதிபர் வரும்வரை போராட்டம் தொடரும் என இருந்தநிலையில் நெடுந்தீவு பிரதேசசெயலக கணக்காளர் வல்லிபுரம்சுபாசனின் உறுதிமொழிக்கமைய போராட்டம் இடைநிறுத்தப்பட்டு மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாடசாலைக்குள் பிரசன்னமாகினர். (05)

காலைக்கதிர் Kalaikkathir


## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


# குறை காண்பதல்ல தீர்வை எட்டுவதே முக்கியமானது

இலங்கை நீதிமன்றங்களில் வழக்குகள் மிக நீண்ட காலமாக இழுபடுவது குறித்த குற்றச்சாட்டுக்கள் நீண்ட காலமாகவே உண்டு. நீதிபதிகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல் காரணங்களால் இந்த நிலமை ஏற்படுவதாகக் காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன. ஆனாலும் அதனை நிவர்த்திக்க எந்தவிதமான நடவடிக்கைகளும் ஆளும் தரப்புகளால் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தப் பிரச்சினையின் உச்சம் நாட்டின் எதிர்காலச் சந்ததியையே பாதிக்கும் வகையில் நகர்ந்துவிட்டது என்கிற அபாய அறிவிப்பை இப்போது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த வெளிப்படுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்தபோது அவர் இந்த விடயத்தையும் சுட்டிக்காட்டியிருந்தார். 40லட்சம்மாணவர்களின்எதிர்காலத்துடன் உயர் நீதிமன்றம் விளையாடுகின்றது என்பதே அவரது அபாய அறிவிப்பாக இருந்தது.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தனது கேள்வியில், மாத்தளை தம்புள்ளை தேர்தல் தொகுதியில் உள்ள தேவஹுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு 38 வருடங்களாக கணித ஆசிரியர் ஒருவர் இல்லை, அவ்வாறே புத்தல கோனகங்ஆர கனிஷ்ட வித்தியாலயத்திற்கு தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் எவரும் இல்லை, எமது நாட்டில் 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் சுசில் 40 வருடங்களாக இரு பாடசாலைகளில் ஏன் கணிதபாட ஆசிரியர்கள் இல்லை என்பதற்கு நேரடியாகப் பதிலளிப்பதை விடுத்து, ஆசிரியர் நியனமங்கள் உயர் நீதிமன்றத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றது என்றார்.

2019ஆம் ஆண்டு பட்டதாரிகள் அபிவிருத்தி அதிகாரிகளாக இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களில் 22 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக்கப்பட்டனர். அவர்களின் துறைசார் பாடங்களுக்கான ஆசிரியர்களாக அவர்களைவகைப்படுத்தாமல் பலரும் பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். நான் இந்த அமைச்சை பொறுப்பேற்கும்போது இந்த 22ஆயிரம் பேருக்கும் பயிற்சியளிக்கப்பட்ட நியமனம் வழங்கி, 3 வருடத்துக்கு பின்னர் பரீட்சை நடத்தி நிரந்தர நியமனம் வழங்கவேண்டி இருந்தது.

இந்த நடவடிக்கை ஆசிரியர் சேவை யாப்புக்கமைய ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் முறைமைக்கு முரணாகும். அதனால் இதனை சரி செய்யும் வகையில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, இந்த 22 ஆயிரம் பேருடன் ஏனைய அபிவிருத்தி அதகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், புதிதாக ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பம் கோரி இருந்தோம். அதன் பிரகாரம் 52 ஆயிரம் விண்ணப்பங்கள் எமக்கு கிடைத்தன. அவர்களை ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்ய போட்டிப் பரீட்சை நடத்த நடடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக சிலர், தாங்களும் பயிற்றப்பட்டவர்களாகநியமிக்கப்பட்டுள்ளநிலையில்தங்களுக்கும் அதற்கான நியமனத்தை வழங்குமாறு தெரிவித்து நீதிமன்றம் சென்றனர்.

இந்தப் பரீட்சையை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்ற நிலையில் கடந்த வருடம் மார்ச் 25 பரீட்சை நடத்த இரண்டு தினங்கள் இருக்கும்போது, உயர் நீதிமன்றம் பரீட்சை நடத்த இடைக்கால தடை உத்தரவு வழங்கியது. இவ்வாறு தடை உத்தரவு வழங்கி தற்போது ஒருவருடத்தை நெருங்கி இருக்கிறது. ஆனால் இன்னும் தீர்ப்பு வரவில்லை.

இப்போது இந்த வழக்கை விசாரித்த நீதியரசர் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார் என்றும் அவர் அப்படிச் செல்வதற்கு முன்னதாக தீர்ப்பை வழங்கும்படி தமது சட்டத்தரணி மூலம் கோரிக்கை முன்வைத்த போதும் அது நடக்கவில்லை என்றும் அமைச்சர் நேற்றுச் சபையில் தெரிவித்தார். அதனால் உயர் நீதிமன்றம் இந்த நாட்டு 40 இலட்சம் மாணவர்களுடனே விளையாடிக்கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமாகுவதால் ஏற்படும் சிக்கல்களின் ஒரு விளைவுதான் இந்தப் பிரச்சினையும். வழக்குகள் நீண்டு இழுபட்டுப் போகும்போது, நீதிபதிகள் ஓய்வுபெற்றுச் சென்றுவிடுவார்கள். பின்னர் அடுத்த நீதிபதிகள் வந்து வழக்கை மீண்டும் விசாரித்துத் தீர்ப்பளிக்க நீண்ட காலமாகிவிடும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் கல்வி அமைச்சர் சார்ந்துள்ள ஆளும் தரப்புத்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். மாணவர்களின்எதிர்காலம்பாழாகிறதேஎன்றுநீதிமன்றங்கள்மீது பழியைப்போட்டுவிட்டுத்தப்பமுடியாது. அதனைநிவர்த்திப்பதற்கான வழிவகைகளையும் கண்டறிந்து செயற்படுத்த வேண்டியது ஆளுபவர்களின் கடமையே. எனவே நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமின்றி விசாரிக்கப்படுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தவேண்டும்.

# சர்வாதிகார நாடாகிறதா இந்தியா?

யோகேந்திர யாதவ்



இந்தக் கேள்வியுடனான துருவ் ரத்தியின் (Dhruv Rathee) காணொலிக் காட்சியை (யூடியூப்) ஒரு வாரத்துக்குள் 160 லட்சம் பேர் பார்த்திருக்கிறார்கள் என்றால் நீங்கள் ஒன்றை நிச்சயமாக நம்பலாம்: இன்றைய இந்தியாவைப் பற்றிய நல்ல கேள்விதான் இது. இந்தக் கேள்விக்கு நல்ல பதில், இந்தியர்களிடம் இருக்கிறதா என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

### காணொலியின் சிறப்பு?

இந்தக் காணொலியின் சிறப்பு என்னவென்றால், இதில் புதிதாக சம்பவங்களோ ஆவணங்களோ இடம பெற்றுவிடவில்லை. அன்றாடம் செய்தித்தாள்களில் வரும் செய்திகளைத் தவிர வேறெதையும் கொண்டு இதை அவர் தயாரிக்கவில்லை. ஜனநாயகத்தை ஆதரிப்பவர்களும் - ஒவ்வொரு இந்தியரும் கவலைப்படும் வகையில், சம்பவங்களைத் தெளிவாக நினைவுகூர்வதாக இது அமைந்திருக்கிறது.

தேர்தல் நன்கொடை பத்திரங்கள், சண்டீகர் மேயர் தேர்தலில் சமீபத்தில் நடந்த தில்லுமுல்லு, மத்தியப் புலனாய்வுக் கழகம் (சிபிஐ), அமலாக்கப்பிரிவு இயக்குநரகம் (இ.டி.) எதிர்க்கட்சிகளை அச்சுறுத்த நடத்தும் திடீர் சோதனைகள், ஊடக சுதந்திரத்தின் வீழ்ச்சி, எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்கும் போக்கு, எதிர்க்கட்சி அரசுகளைத் திட்டமிட்டு கவிழ்ப்பது என்று இவை போன்ற நிகழ்வுகளைத்தான் தொகுத்திருக்கிறார். இருந்தாலும், பாஜக ஆதரவாளர்கள் கொந்தளித்து பதில் தரும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்.

காணொலியைத் தயாரித்தவருடைய நம்பகத்தன்மை, மோடியை எதிர்க்கும் சொல்லாடல்கள் இல்லாமை, நிகழ்வுகளை மிக எளிமையாகத் தொகுத்திருக்கும் விதம், எல்லோருக்கும் தெரிந்தவற்றை அடுக்கியிருப்பது, ஒன்றுடன் ஒன்றைத் தொடர்புபடுத்தும் பாங்கு ஆகியவைதான் இந்தக் காணொலிக்கு வலுசேர்த்திருக்கிறது.

'உண்மை - கடந்த' இந்தக் காலத்திலும் சாதாரணமான ஒரு கேள்விக்கு விடைபெற மேற்கொண்டுள்ள முயற்சி, உங்களுடைய சிந்தனையை வெகு தொலைவுக்கு இட்டுச் செல்லும்.

உடனே உங்களை எதிர்வினையாற்றச் செய்யும் தன்மை கொண்டதுதான் நல்ல கேள்விக்கு அடையாளம். 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற விடையை உடனே சொல்லத் தூண்டுகிறது இந்தக் கேள்வி. இந்தக் காணொலியைத் தயாரித்தவர் சொல்லாவிட்டாலும், இந்தியா சர்வாதிகாரப் பாதையில் போகிறது என்பதை அந்தத் தொகுப்பு தெரிவிக்கிறது. இந்த ஆட்சியை விமர்சிப்பவர்களில் பெரும்பாலானோர் அப்படித்தான் பார்க்கின்றனர்.

இப்போதைய ஆட்சியை 'சர்வாதிகாரம்' என்று அடையாளம் காண்பது வெளிப்பார்வைக்கு அப்படியொன்றும் கடுமையான வகைப்படுத்தலும் அல்ல் ஆனால், அப்படிச் சொல்வது மிகையான விமர்சனமாகக் கருதப்படுவதால்தான் இந்த ஆட்சியால் அதிகக் கண்டனங்களுக்கு ஆளாகாமல் தப்பிக்க முடிகிறது.

'சர்வாதிகார நாடாகிறதா இந்தியா?' என்ற கேள்வி, 'ஜனநாயகம்' என்பதற்கான இலக்கணத்துக்கு இந்திய அரமைப்பு இப்போது எப்படிப் பொருந்துகிறது என்று ஒப்பிட்டுப்பார்க்க வைக்கிறது. ஜனநாயகம் என்ற அமைப்புக்கான நியதிக்கும் நம் நாட்டில் நிலவும் நடைமுறைக்கும் இடையே உள்ள மேலும் பெரிதாகிக்கொண்டேவரும் இடைவெளியை நாம் நேருக்கு நேர் பார்க்க இந்தக் கேள்வி இட்டுச் செல்கிறது.

'சர்வாதிகாரம்' என்றால் அதன் இலக்கணமாக இருக்கும் இராணுவச் சட்ட நடைமுறை, பத்திரிகைத் தணிக்கை, தேர்தல் நடைபெறாமல் நிறுத்திவைப்பது, அரசமைப்புச் சட்டப்படியான உரிமைகளுக்குத் தடை என்பவை நினைவுக்கு வரும். இப்படியெல்லாம் இல்லையே என்று கூறி மோடியின் ஆதரவாளர்களால், 'இந்தியா சர்வாதிகார நாடு அல்ல' என்று வாதிட முடிகிறது.

அவர்களுடைய வாதத்தின் சாரம் இதுதான்: சர்வாதிகாரத்துக்கு உரிய அம்சங்களைக் காண முடிவதில்லை என்பதால், இது ஒரு வகையிலான ஜனநாயகம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். எனவே, இருபத்தோராவது நூற்றாண்டில் அரசியல் அறிவியலின் பாலபாடம் இதுதான்: ஜனநாயகம் அல்லாத அரசை சர்வாதிகார அரசு என்று கூறிவிட முடியாது.

நாம் வாழும் இக்காலத்தில், ஜனநாயகமற்ற அரசுகளுக்கு, பழைய கால சர்வாதிகாரத்துக்கான அலங்காரங்கள், புற அடையாளங்கள் தேவைப்படுவதில்லை. இந்தப் பின்னணியில் நம் முன் உள்ள கேள்வி, 'நாம் இப்போதும் பலமான ஜனநாயக நாடாகத்தான் தொடர்கிறோமா?'

ஜனநாயகமற்ற எல்லா வகை அரசுகளையும் இப்படி அழைக்க முற்பட்டால் - மிகப் பெரிய அரசியல் வகைமை உள்ளவையாகிவிடும். சர்வாதிகார - எதேச்சாதிகார அரசுகள் பற்றிய தன்னுடைய நூலில் பேராசிரியர் ஜ/வான் லின்ஸ், ஒப்பீட்டு அரசியல் நிபுணர் என்ற வகையில் இதுபற்றிய தொடக்க அறிமுகத்தைச் செய்துவைக்கிறார். ஆனால், இதன் பின்னணி அதற்குப் பிறகு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகைகளில் மாற்றம் அடைந்துள்ளது.

அமெரிக்க - சோவியத் ஒன்றிய வல்லரசுகளுக்கு இடையிலான 'பனிப்போர்' காலம் முடிந்துவிட்டது, பிறகு சிறிது காலம் கோலோச்சிய சுதந்திரச் சிந்தனையாளர்களின் செல்வாக்கு, அனைத்து நாடுகளையும் முழுமையான ஜனநாயகத்துக்குத் திரும்புமாறு கூறிவிட்டு ஓய்ந்துவிட்டது. ஜனநாயகமற்ற நாடுகள் தங்களை அப்படி அழைத்துக்கொள்ளாத வரையில், ஜனநாயக நாடுகளாகவே நீடிக்கின்றன. எனவே, ஜனநாயகம் - சர்வாதிகாரம் ஆகிய இரண்டின் அம்சங்களும் கலந்த கலப்பின அரசுகளையே அதிகம் காண்கிறோம். 'கலப்பு' என்பது இப்போதைய காலத்தில் எல்லாத் துறைகளிலும் சகஜமாகிவிட்டது.

'போட்டி சர்வாதிகாரம்' என்ற கலப்பின ஆட்சிமுறை குறித்து சிறப்பாகக் கூறியாக வேண்டும். ஸ்டீவன் லெவிட்ஸ்கி, லூகான் ஏ.வே என்ற இருவரும் இது தொடர்பாக 'ஜனநாயகம்' என்ற ஆய்வேட்டில் கட்டுரை வரைந்துள்ளனர். சர்வாதிகாரத்தில் இது ஒரு துணைப் பிரிவு. இங்கே சர்வாதிகாரிகள் ஜனநாயக நடைமுறைகள் அனைத்தையுமே இரத்துசெய்துவிட மாட்டார்கள். ஆனால், அதிகாரப்பூர்வமற்ற வகையில் நெருக்குதலையும் கட்டுப்பாடுகளையும் கையாள்வார்கள், ஜனநாயகத்தின் முறையான கட்டமைப்புகளை அப்படியே தொடர அனுமதிப்பார்கள். இதை ஜனநாயகத்தின் மோசமான வடிவம் என்று கூறிவிட முடியாது, இது சர்வாதிகாரத்தின் அரைகுறை வடிவமாகும்.

இங்கு முறையான ஜனநாயக அமைப்புகள் நீடிக்க அனுமதிக்கப்படுவதுடன் அவற்றின் மூலம் அரசியல் அதிகாரம் பெறப்பட்டு, செயல்படுத்தப்படும். ஜனநாயகத்துக்கான விதிகளை, ஆட்சியில் இருப்பவர்கள் அடிக்கடி மீறுவார்கள், எனவே குறைந்தபட்ச ஜனநாயகத் தரம்கூட அந்த ஆட்சியில் இருக்காது. தேர்தல்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடக்கும், தேர்தல்களிலும் பெருமளவு மோசடிகள் நடைபெறாது.

அதேசமயம், ஆட்சியாளர்கள் அரசின் வளங்களைத் தொடர்ந்து சுயநலத்துக்குப் பயன்படுத்துவார்கள், எதிர்க்கட்சிகளுக்கு ஊடக ஆதரவு போதிய அளவு கிடைக்காமல் பார்த்துக்கொள்வார்கள், எதிர்க்கட்சி வேட்பாளர்களையும் ஆதரவாளர்களையும் அலைக்கழிப்பார்கள், சில வழிகளில் தேர்தல் முடிவுகளைக்கூட மாற்றும் மோசடிகளில் ஈடுபடுவார்கள்" என்கின்றனர்.

இந்தக் கருத்துகள் இந்தியாவுக்கு எப்படிப் பொருந்தும் என்று பார்ப்பதற்கு முன்னால், இரண்டு துணை வகைகள் குறித்துப் பார்ப்போம். முழுமையற்ற ஜனநாயக முறையிலிருந்து, வெவ்வேறு ரகத்தில் 'போட்டி சர்வாதிகார' முறை தோன்றுகிறது. அதிகாரத்தை இழந்துவிடக்கூடிய ஆபத்து இல்லாமலேயே, ஜனநாயகம்தான் நிலவுகிறது என்று நம்பவைக்கும்படி ஜனநாயகத்துக்கு அடிப்படையான சில நிறுவனங்களின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்கிறது. (10ஆம் பக்கம் பார்க்க...)

# தமிழர்களின் ஒரே ஆயுதம் கல்வி ஒரே சிந்தனை தமிழ் ஒற்றுமை

## மனோ கணேசன் திட்டவட்டம்

இன்று, தமிழர்களாகிய எங்கள் ஒரே ஆயுதம், கல்வி. அதேபோல் எங்கள் ஒரே சிந்தனை தமிழ் ஒற்றுமை. இந்த இரண்டு கொள்கைகளையும் முன்னெடுத்து, கனடா தமிழர் பேரவை, அமெரிக்கா முதல் ஐரோப்பா, ஆசியா ஊடாக ஆஸ்திரேலியா வரை உலகம் முழுக்க பரவி, விரவி வாழ்கின்ற தமிழருக்கு, முன்மாதிரியாக நின்று வழி காட்டி உள்ளது.



தெஹியோவிற்ற தமிழ் வித்தியாலய விஞ்ஞானகூட அங்குராப்பணத்தில் தெரிவித்துள்ளார் தமிழர் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இந்த இரு கொள்கைகளின் அடையாளமாகவே, இங்கே இன்று இந்த மலையகத் தமிழரினுள் வரும் பெருந்தோட்டப் பிள்ளைகள் பயிலும், தெஹியோவிற்ற தமிழ் மகாவித்தியாலய விஞ்ஞானகூடம் கட்டப்பட மற்றும் உபகரணங்கள் வழங்க, கனடா மற்றும் அமெரிக்கா வாழ் தமிழர்கள் மத்தியில் நிதி சேகரித்து, கனடா தமிழர் பேரவை சாதித்து காட்டியுள்ளது எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனின் கோரிக்கையின் பேரில், கனடாத் தமிழர் பேரவையின் நிதி பங்களிப்பால், நிர்மாணிக்கப்பட்ட தெஹியோவிற்ற தமிழ் மகாவித்தியாலய விஞ்ஞானகூட அங்குரார்ப்பண விழாவில், மனோ கணேசன் எம்.பி., கனடா தூதுவர் எரிக் வொல்ஷ், கனடாத் தமிழர் பேரவை நிர்வாகிகள் ஒப்பந்தகாரர் துரைராஜா, துஷ்யந்தன், உமாசுதன் சுந்தரமூர்த்தி, அசோகன் தம்புசாமி, எம்.பிகளான ராதாகிருஷ்ணன், சுஜித் பெரேரா, உதயகுமார், பாடசாலை அதிபர் திலகலோஜினி, கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் உள்ளிட்ட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். கல்விக்கு முதலிடம், தமிழர் ஒற்றுமை ஆகிய இருமுனை செயற்பாட்டில், கனடாத் தமிழர் பேரவை ஆற்றியுள்ள பணி தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை அரசாங்கத்திடம் நிதி இல்லை. அது பற்றி ஒப்பாரி வைப்பதில் பயனும் இல்லை. நாளை அரசு மாறினாலும் சடுதி மாற்றம் வர போவதும் இல்லை. நிலைமை இயல்பு வாழ்வுக்கு திரும்ப பல ஆண்டுகள் ஆகும். இந்நிலையில் ஏற்கனவே இந்நாட்டில் ஒடுக்கப் பட்டு, பாரபட்சமாக நடத்தப் படும் தமிழர்கள், மேன்மேலும் துன்பத்தை எதிர் நோக்குகிறார்கள்.

முதலாவது கல்வி. இங்கேதான், உலகம் முழுக்க புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் அடைகிறது. எம்மில் பல தேவைப்பாடுகள் இருந்தாலும், பிரதான தேவைப்பாடு, கல்வி என சான்றோர் தீர்மானித்து விட்டார்கள். அதைத்தான் 'கல்விக்கு முதலிடம்' என்கிறோம். கல்வி கிடைத்து விட்டால், ஏனைய எல்லா வளங்களும் வந்து சேர வேண்டிய இடத்தில் வந்து சேர்ந்து, பொருந்தி விடும். அதைக் கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள். இலங்கை முழுக்க வாழும் தமிழ் மாணவர்களின் முன்பள்ளி கல்வி முதல், உயர்கல்வி வரை மிகப்பெரும் சவால்களை நமது இனம் எதிர்கொள்கிறது. அவற்றை நாம், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உடன் பிறப்புகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக சந்திப்போம்.

இரண்டாவது, தமிழர் ஒற்றுமை. இந்நாட்டில் தனித்துவ அடையாளங்களைக் கொண்ட ஈழத்தமிழர், மலையகத்தமிழர் ஆகியோர் மத்தியில் ஏற்படக்கூடிய இயல்பான ஒன்றுசேர்வின் மூலமாகவே இலங்கை வாழ் தமிழர் ஒற்றுமை ஓங்க முடியும். எமக்கு வேறு வழி கிடையாது. அதையும் கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள். அதன் காரணமாகவே, மலையகத் தமிழரின் இலங்கை குடிபுகு 200 ஆண்டு பூர்த்தியின் அடையாளமாக நிதி சேகரிப்பை நடத்தி இந்த பெரும் பணியை ஆற்றி உள்ளார்கள். பல ஆயிர கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் எம் தமிழர் எம்மையும் அரவணைகிறார்கள் என்ற செய்தி இன்று இங்கே மலையக தமிழ், பெருந்தோட்ட மக்களை உணர்வுபூர்வமாக சென்று அடைகிறது. இதைவிட தமிழர் ஒற்றுமைக்கு சான்று என்ன வேண்டும்?

நாம் இப்போது 'தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம்' அமைத்துள்ளோம். அதன் தலைவராக, தகைமையுள்ள நண்பர் அதிபர் பரமேஸ்வரனை நியமித்துள்ளோம். நாடாளுமன்ற சட்டப்படி கூட்டிணைக்கப்படும் இந்த கல்வி கழகத்தின், கல்விக்கு முதலிடம் என்ற கருப்பொருளில் இணைய தளம் வெகு விரைவில் அறிமுகமாகும். அதில், இலங்கை முழுக்க அனைத்து மாவட்ட தமிழர் கல்வி தேவைகள் தொடர்பில் நம்பக தன்மை கொண்ட தகவல் பதிவேற்றம் செய்யப்படும். ஆகவே உலக தமிழர் அவற்றை தெரிந்து அறிந்து நேரடியாக உதவிடலாம். - என்றார்.

(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# புளிச்சாக்குளம் சிடார் விளையாட்டுக் கழக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நிகழ்வு

**ரிஷாத் எம்.பி பங்கேற்பு**







புத்தளம், புளிச்சாக்குளம் சிடார் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள், ஞாயிற்றுக்கிழமை புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, இறுதிநாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

மேலும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.டி.எம்.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிக், பைசல் மரைக்கார், நிஜாம் மற்றும் அதிபர் சரீக், இணைப்பாளர் இர்ஷாட், மர்சூன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர். (05)




# உள்ளூர் வளங்களை அழிப்பதற்கு எதிராக புங்குடுதீவில் போராட்டம்

புங்குடுதீவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உள்ளூர் வளங்களை அழிப்பதற்கெதிரான கவனவீர்ப்பு போராட்டமொன்று புங்குடுதீவு கடற்தொழிலாளர்கள் சங்கத்தால் தீவக சிவில் சமூகம் அமைப்பின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கடலட்டைப் பண்ணை எனும் பெயரில் உள்ளூர் மீனவர்களை முற்றாக புறக்கணித்து இலாப நோக்கில் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கும் , தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கும் கடலட்டை பண்ணைகள் அமைப்பதற்குரிய அனுமதிகளை கடற்தொழில் அமைச்சு வழங்குவதற்கு எதிராகவும் பாரம்பரிய மீன்பிடி தொழிலை அழிப்பதற்கு எதிராகவும் , புங்குடுதீவில் நடைபெற்றுவருகின்ற சட்டவிரோத மண் அகழ்வை உடனடியாக தடுக்கக்கோரியும்

புங்குடுதீவு கிராமத்தில் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்ற கால்நடை வளத்தை பாதுகாக்க கோரியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கவனவீர்ப்பு போராட்டத்தில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சமூக செயற்பாட்டாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி, சட்டத்தரணி க. சுகாஷ், தீவக சிவில் சமூகம் அமைப்பின் பொருளாளர் கருணாகரன் குணாளன், வேலணை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன், ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினர் கே. ஞானேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்ததோடு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் தீவகம் தெற்கு பிரதேச செயலாளருக்கான மகஜர் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

## சொத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பதன் அவசியம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் மாகாண பகிரங்க சேவையின் பணியாட்தொகுதி அலுவலர்கள், உள்ளூராட்சிசபைகளுக்குத்தெரிவு செய்யப்பட்டஉறுப்பினர்கள்மற்றும் பணியாட்தொகுதி அலுவலர்கள், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் நீதிபதிகள் மற்றும் அரச அதிகாரிகள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகள், நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டநீதித்துறைஅதிகாரிகள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச அலுவலர்கள், அமைச்சுகள் மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள், அரசமைப்பின் 41அ(1)(உ) எனும் உறுப்புரையின் நியதிகளின் படி நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத அரசமைப்பு பேரவை உறுப்பினர்கள், அரசமைப்பின் 41ஆ உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட எவையேனும் ஆணைக்குழுக்களின், விடயத்திற்கேற்ப, தலைவர்கள் அல்லது உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட நபர்கள் ஆகியோரும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச வங்கிகளின் பணியாட்தொகுதி அலுவலர்கள், அரசமைப்பின் 41அ (1)(இ) உறுப்புரையின் கீழ் அல்லது எதேனும் நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவின் பணியாட்தொகுதி அலுவலர்கள், ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வை ஆணைக்குழுக்களின் அல்லது குழுக்களின் தலைவர்கள், ஆணையாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பணியாட்தொகுதி அலுவலர்கள், ஏதேனும் நியதிச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் நிறுவப்பட்ட அரச சபைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அலுவலர்களும் சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

தரைப்படைச் சட்டத்தின் (357 ஆம் அத்தியாயமான) ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை தரைப்படையின் அலுவலர்கள், கடற்படைச் சட்டத்தின் (358 ஆம் அத்தியாயமான) ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை கடற்படையின் அலுவலர்கள், விமானப்படைச் சட்டத்தின் (359 ஆம் அத்தியாயமான) ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை விமானப்படையின் ஆணைபெற்ற அலுவலர்கள், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் இலக்கம் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் (262 ஆம் அத்தியாயம்), உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டம் அல்லது தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டம் அல்லது (138 ஆம் அத்தியாயம்), தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளின் பதவிநிலை அதிகாரிகள். தொழில் சங்கங்கள் (138 ஆம் அத்தியாயமான) கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்று அதிகாரிகாரிகள், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்,1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் (262 ஆம் அத்தியாயம்), உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டம் அல்லது தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் நடைபெறவேண்டியுள்ள தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆகியோரும் தமது விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுபெற்றுள்ள அக்கம்பனிகளில் 25 சதவீதத்திற்குக் குறையாத பங்குகள் அரசினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் கட்டுபடுத்தப்பட்டிருக்கையில் அந்தக் கம்பனிகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், மற்றும் பணியாட்தொகுதி அலுவலர்கள், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிநிறுவனங்களின் முகாமைத்துவ அல்லது மேற்பார்வைசார் வகிபாகங்களிலுள்ள பணியாட்தொகுதியினரும் புதிய பட்டியலில் அடங்குவர். அடங்குகின்றனர்.

இலங்கை ராஜதந்திர தூதரகப் பிரதானிகள், இலங்கையின் இராஜதந்தித் தூதரகங்களுக்கு அமைச்சர்களினால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள், செய்தித்தாள் கட்டளைச் சட்டத்தின் (180 ஆம் அத்தியாயமான) 2ஆவது பிரிவின் கீழ் எந்தச் செய்தித்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகைகள் செய்யப்பட்டுள்ளனவோ அந்த செய்தித்தாள்களின் உரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்பீட பணியாட்தொகுதியின் உறுப்பினர்கள்,1991 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கையின் தொலைத் தொடர்பாடல் சட்டத்தின் 17ஆவது பிரிவின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட ஊடக கம்பனிகளின் உரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியர் பீட பணியாட்தொகுதி உறுப்பினர்கள்,1973 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின் படி தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவிநிலை அதிகாரிகள், மற்றும் வேறு அலுவலர்களின் அந்தந்த அலுவலகங்களில் அவர்கள் புரிகின்ற பணியின் தன்மையைக் கவனத்தில் கொண்டு அத்தகைய அலுவலர்கள் இலஞ்சத்துக்கு அல்லது ஊழலுக்கு பலியாகக் கூடிய தன்மையைக் கருத்திலெடுப்பதன் மூலம் உயர் ஆபத்து வகுதிகளை ஒழுங்குவிதிகளினால் விதத்துரைக்கப்படக் கூடிய, அத்தகைய வேறு அலுவலர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை வெளியிட வேண்டும்.

மேலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய வற்றை வெளியிடுவதற்காக மையப்படுத்தப்பட்ட மின்னணு அமைப்பொன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கட்டமைப்பை, முறைப்படி தொடங்கும் வரை புதிய சட்டத்தின் விதிகளின்படி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை அறிவிக்கும் மாதிரியில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அகியவற்றை வெளியிடுவது தொடர்பான முறைமை உள்ளடங்கிய சுற்றறிக்கை மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை வெளியிடுவது தொடர்பான திருத்தப்பட்ட மாதிரிகள் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் www.ciab-ocgov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதனை 01-03-2024 முதல் பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், மறு அறிவித்தல் வரை, சம்பந்தப்பட்டவர்கள் தமது சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்களை சமர்ப்பிக்க வேண்டும் என இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

புதிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமனத்தில் அரசமைப்பு மீறப்பட்டுள்ளது. இந்த நியமனத்தின்போது ஆதரவாக 4 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துக் கொள்ளவில்லை. வாக்களிப்பு நிறைவடைந்ததன் பின்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 'இந்த நியமனத்துக்கு எனது தீர்மானமிக்க வாக்கினை வழங்குகிறேன்' ஜனாதிபதிக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளார். இவ்வாறான முறைமை அரசமைப்பு பேரவையில் கிடையாது.

அரசமைப்பு பேரவையில் ஒரு நியமனம் தொடர்பில் வாக்கெடுப்பு கோரப்படும்போது வாக்களிப்பில் சமநிலை காணப்படும் பட்சத்தில் மாத்திரமே சபாநாயகரால் வாக்களிக்க முடியும். ஆனால் புதிய பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்தில் சமனற்ற தன்மையில்தான் வாக்களிப்பு காணப்பட்டுள்ளது. ஆகவே அரசமைப்புக்கு முரணான வகையில் தான் சபாநாயகர் தனது தீர்மானமிக்க வாக்கினை பயன்படுத்தியுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் அரசமைப்புக்கு முரணாக செயற்பட்டுக் கொண்டு நாட்டு மக்களை அரசமைப்புக்கு அமைய செயற்பட வேண்டும் என்று குறிப்பிடுவது வேடிக்கையானது. பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் இடம்பெற்ற தவறை ஆளும் தரப்புத் திருத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

## விழிப்புணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் மற்றும் பல நிபுணத்துவ அறிவுள்ள பல தரப்பினரின் பங்கேற்புடன் நடைபெற்றது. அடுத்த கலந்துரையாடல் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிற சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இங்கு, நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் (ஞுறீவீயூனி) தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் இந்த சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான உத்தேச சட்ட மூலம் குறித்தும் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இணைந்திருந்த நபர்கள் அதற்கு முழுமையாக பங்களித்ததோடு ஆலோசனைகளையும் யோசனைகளையும் முன்வைத்தனர்.

1983 - 2009 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவதிட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேச ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் முறையாகத் தகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்கப் பரிந்துரை வழங்குதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாகப் இயங்குதல் இதன் நோக்கமாகும்.

1983- 2009 ஆண்டுக்கு இடையிலும் அதற்குப் பின்னரும் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய இந்த ஆணைக்குழு சட்டமூலமொன்றைத் தயாரிக்கவுள்ளது. முன்மொழியப்பட்ட சட்டத்தை உருவாக்கும் செயல்முறையில் கவனம் செலுத்துவதுடன், மோதல் நடைபெற்ற பகுதிகளுக்கு களப்பயணங்கள் நடத்துதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் மற்றும் கருத்துக்களைப் பெறுதல் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரை இணைத்துக்கொள்வதற்கான மூலோபாயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

2016-2018 காலப்பகுதியில் செயற்பட்ட ஆலோசனை செயலணியினால் இந்த வரைபு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆலோசனைப் பணிகள் மற்றும் கடந்த காலத்திலும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தால் பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை மற்றும் தற்பொழுது மேற்கொள்ளப்படும் ஆலோசனைப் பணிகள் குறித்தும் இங்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

வினைத்திறனான நல்லிணக்கச்செயன்முறை மற்றும் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஆளும் தரப்பிற்குள் ஒரு ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்றின் அவசியத்தையும் இந்தக் கலந்துரையாடல்கள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மக்கள் நிலைப்பாட்டினை ஒருங்கமைத்தல் மற்றும் இன ரீதியான கருத்தியல்களை உருவாக்குவதற்கான ஊடகங்களின் இயலுமை, தேசிய நல்லிணத்தை ஏற்படுத்துவதில் ஊடகங்களின் வகிபாகம் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டதோடு, இதன்போது ஊடகங்கள் பொறுப்புடன் அறிக்கையிட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

ஆணைக்குழுக்களின் கட்டமைப்பு, பல்வேறு நிபுணர்களின் தெரிவு மற்றும் நல்லிணக்கத்திற்கான மக்கள் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக சிவில் அமைப்புக்கள் மற்றும் மதத்தலைவர்களைத் தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

ஆணைக்குழுக்களின் அதிகாரம், ஆணையாளர்களை நியமிக்கும் முறைமை, ஆலோசகர்கள் குழு, கண்காணிப்புக் குழுவின் பணிகள் தொடர்பிலும் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயற்குழுவின் இடைக்கால செயலக பிரதிநிதிகளால் இதன்போது, விளக்கமளிக்கப்பட்டது.

உண்மையைக் கூறுவதை மேம்படுத்தல், பாதிக்கப்பட்டவர்களின் கௌரவத்தை மீளப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பிரச்சினைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதை நோக்காக கொண்டு இதற்கான உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளல் தொடர்பிலான யோசனைகளையும் பெற்றுத்தருமாறு இடைக்கால செயலக பிரதிநிதிகள் கோரினர்.

இந்த ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்களின் மூலம் பெறப்பட்ட பல யோசனைகள் ஏற்கனவே சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும், விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டது.

வண. கழுபான பியரத்தன தேரர், கலாநிதி ஜெஹான் பெரேரா, கலாநிதி ஜோ விலியம், கலாநிதி தயானி பனாகொட, விசாகா தர்மதாச, வீ.கமலதாச உள்ளிட்டவர்களுடன் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பிலான பரந்த செயற்பாடுகள் மற்றும் விருப்பத்துடன் செயலாற்றும் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் சார்பில் அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச மற்றும் கொள்கைப் பிரிவின் தலைவர் கலாநிதி சி.வை. தங்கராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.




காலைக்கதிர் Kalaikkathir

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைப்பொறுத்தமட்டில் அண்மையகாலங்களில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் சிவில் இடைவெளி ஆகியவற்றுடன் தொடர்புடைய சில முக்கிய சட்ட உருவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் துரதிஷ்டவசமாக இவற்றில் சில சட்ட உருவாக்கங்கள் தீவிர கரிசனையைத் தோற்றுவிப்பவையாக அமைந்துள்ளன.

குறிப்பாக நிகழ்நிலைக்காப்பு சட்டமானது நிகழ்நிலை தொடர்பாடலை தீவிரமாக மட்டுப்படுத்தக்கூடியதும், அனைத்துவித வெளிப்படுத்தல்களையும் குற்றமாக்கக்கூடியதும், கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தின் மீது மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதுமான சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. எனவே இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளுக்கு ஏற்புடைய வகையில் அச்சட்டத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று இலங்கையின் சர்வதேசகடப்பாடுகளுக்குஏற்புடைய சட்டத்தினூடாக பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யுமாறு நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றோம். கடந்த நவம்பர் மாதம் தடுத்துவைக்கப்பட்ட 9 தமிழர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதேவேளை பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் மிகநீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அடுத்ததாக உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை அவதானித்துள்ளோம். ஆனால் எந்தவொரு சட்டத்தையும் உருவாக்கமுன்னர் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடியவாறான அனைவரையும் உள்ளடக்கிய செயன்முறையொன்றைப் பின்பற்ற வேண்டியது இன்றியமையாததாகும். எதிர்வருங்காலங்களில் ஸ்தாபிக்கப்படக்கூடிய எந்தவொரு ஆணைக்குழுவும் சுயாதீனமானதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், அர்த்தமுள்ளதாகவும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும், பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யக்கூடியதாகவும், நிலைமாறுகால நீதிப்பொறிமுறையைக் கட்டியெழுப்பும் அதேவேளை, பொறுப்புக்கூறலுக்கான பாதையை வகுத்தளிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

அதுமாத்திரமன்றி அடிப்படை சுதந்திரத்திலும், சிவில் சமூக இடைவெளியிலும் தீவிர மட்டுப்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய சட்டங்களை கொண்டுவருதாக இருந்தால், அதுகுறித்து சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளடங்கலாக சகல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறும் அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றோம்.

காணி விடுவிப்பு தொடர்பில் அரசாங்கத்தின் கடப்பாட்டை வரவேற்கின்றோம். ஆனால் குறிப்பாக நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் நில ஆக்கிரமிப்புடன் தொடர்புடையவகையில் அதிகரித்துவரும் அமைதியின்மை நிலைவரம் குறித்தும் நாம் கரிசனை கொண்டிருக்கின்றோம். எனவே இச்சவால்களை உரியவாறு கையாள்வதற்கு உங்களுடனும் (உயர்ஸ்தானிகர்), உங்களது அலுவலகத்துடனும் இணைந்து பணியாற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் 51ஃ1 தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இலங்கை அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்றார்.

## இல்லத்தரசிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக நேற்று அரசாங்க தகவல் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகின் பெரும்பாலான நாடுகளில் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் எட்டாம் திகதி பெண்களுக்கான விசேட தினமாக அனுஷ்டிக்கப்படுவதாக தெரிவித்த ராஜா அமைச்சர் இலங்கையில் சனத் தொகையில் பெண்களின் பிரதிநிதித்துவம்செறிவாகக்காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மார்ச் மாதம் எட்டாம் தேதி பத்திரமுள்ள வாட்டர் ஏஜ் வளாகத்தில் சர்வதேச மகளிர் தினத்தை அனுஷ்டிக்கும் நிகழ்வு காலை 10 மணிக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் நடைபெறவுள்ளதாக வலியுறுத்திய ராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மார்ச் மாதம் 6 மற்றும் ஏழு ஆகிய இருதினங்களிலும் இவ்வளாகத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ள நீயே சக்தி 2024 உற்பத்தி சந்தைக்கு இராஜாங்க அமைச்சர் சகலருக்கும் அழைப்பு விடுத்தார்

இச்சந்தைக்காக இலங்கை முழுவதும் உள்ள பெருந்தொகையானவர்கள் வருகை தந்து தமது கையால் மேற்கொண்டு உற்பத்திகள் உட்பட பல்வேறு உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக எடுத்துவர உள்ளனர்.

எட்டாம் திகதி நுண்கடன் சுமையால் செயல்படும் பெண்களுக்கான விசேட உதவி நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இச்செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது மகளிர் சிறுவர் அலுவலர்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் எம். யமுனா பெரேரா, நடிகர் செயலாளர் அபிவிருத்தி பிரிவின் நில்மினி ஹேராத் மற்றும் இலங்கை மகளிர் பணியகத்தின் பணிப்பாளர் சம்பா உபசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை வரவேற்பதாகவும், அதுகுறித்த நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் கைப்பற்றப்பட்ட காணிகளை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான உள்ளகப்பொறிமுறையை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி இம்முயற்சிகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

## சாரணர் இயக்க ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் 167ஆவது பிறந்த தினம் வவுனியாவில் அனுஸ்டிப்பு





சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் 167 ஆவது பிறந்த தினம் வவுனியாவில் அனுஸ்டிக்கப்பட்டது. இலங்கை சாரணர் சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கொடியேற்றத்துடன் ஆரம்பித்த நிகழ்வில் பேடன் பவல் பிரபுவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து சாரண மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன், 10 ஆவது தேசிய ஜம்பேறியில் பங்குபற்றிய சாரண மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் குருதி வங்கியில் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.

இதில் சாரணர் சங்கத்தின் முன்னாள் மாவட்ட ஆணையாளரும், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னாள் ஓய்வுநிலை அதிபருமான ம.ச.பத்மநாதன், மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவரும், வவுனியா வடக்கு பிரதி கல்விப் பணிப்பாளருமான ம.ஜெயரூபன், சாரணர் சங்க உபதலைவரும், வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தின் அதிபருமாகிய தமிழழகன், உதவி மாவட்ட ஆணையாளர்கள், ஜனாதிபதி சாரணர்கள், திரி சாரணர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டதுடன் குருதிக் கொடையிலும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

(05-100)

## முஷாரப் எம்.பி யின் கருத்துக்கு கண்டனம்

(கே எ ஹமீட்)



கிழக்கு மாகாணத்தில் நிருவாக ரீதியாக புறக்கணிக்கப்படும் முஸ்லிம் நிருவாகிகள் தகுதியற்றவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ முஷாரப் தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிப்பதாக அ.இ.ம.காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் அமீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை யாடோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்துகொண்டு பல்வேறு கேள்விகளுக்கு பதில் வழங்கி நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப்பிடம் ஊடகவியலாளர்கள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் நிர்வாக சமநிலையற்ற தன்மைகள் தொடர்பில் கேள்வியினை எழுப்பியருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் எந்த பதவி நிலையிலும் எவரும் இல்லை என்றும், பல்வேறு பதவி நிலைகளுக்கு முஸ்லிம் நிர்வாகிகள் உள்ளவாங்கப்படவில்லை என்றும் இதற்கு ஏன் நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று கேட்டிருந்தனர். ஆனால் அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிய பதிலானது நிருவாக ரீதியில் சிரேஷ்டத்துவம் மிகுந்தவர்கள் அந்தப் பதவிக்கு பொருத்தமற்றவர்கள், ஆளுமையற்றவர்கள் என கூறியிருக்கின்றமை மிகுந்த கண்டனத்துக்குரியதாகும்.

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் முஸ்லிம் சிரேஷ்டத்துவம் மிக்கவர்களை அவமானப்படுத்தியிருப்பதாகவே இதனூடாக அறிந்துகொள்ளமுடிகின்றது. தத்தமது சுயநலங்களுக்கு எமது சமூகத்தையும், சமூகத்திலுள்ள சிரேஷ்டத்துவம் மிகுந்த உயர் அதிகாரிகளையும் பலிகொடுப்பதாகவே இந்தக் கருத்தைப் புரிந்துகொள்வதாக அவர் தெரிவித்தார்.

(05)

## கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் எம்.பி.. வருகை





(பாறுக் ஷிஹான்)

தேசிய காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் திங்கட்கிழமை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு விஜயம் செய்தார்.

இதன் போது ஸாஹிரா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபீர் பாடசாலையில் செயற்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி திட்ட வரைவுகளுடனான முன்மொழிவை தேசிய காங்கிரஸ் தலைவருக்கு தெளிவுபடுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டினை முன்னிட்டு கல்லூரியின் பிரதான முகப்பில் வரவேற்பு நுழைவாயில்

நிர்மாணிப்பதற்கும், பாடசாலை சுற்று மதில் புனரமைப்பு செய்வதற்கும் முதல் கட்டமாக ஐந்து மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின் போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.ஏ. ஆஷிக், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது-மாளிகைக்காடு ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஹிபத்துல் கரீம் உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(05)

## போசாக்கு உணவு பொதி வழங்கல்



(சர்ஜ/ன் லாபீர்)

அரச சார்பற்ற கிரிசாலிஸ் நிறுவனம் சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கான

போசாக்கு உணவுப் பொதி வழங்கும் 04 ஆம் கட்ட நிகழ்வு திங்கட்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

இப் போசாக்கு உணவுப் பொதி வழங்கும் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்எல்.முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொதிகளை வழங்கி வைத்தார். மேலும் இந் நிகழ்வுக்கு உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ், விடயத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரக்கீபா கிரிசாலிஸ் நிறுவனத்தின் திட்ட உதவியாளர் பி. தசதரா உட்பட பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# சர்வாதிகார நாடாகிறதா............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

கிர்கிஸ்தான், பொலீவியா, செர்பியா, நைஜீரியா, கென்யா, ஜிம்பாப்வே நாடுகள் இந்த வகையிலானவை.

போட்டி சர்வாதிகாரத்தின் இன்னொரு வகையில் வலிமையான ஜனநாயக அமைப்புமுறையானது, எப்படியாகும் என்று ஊகிக்க முடியாத அரசியல் போட்டிகள் காரணமாக சர்வாதிகார அமைப்புக்கு மாறிவிடுகின்றன. ஹங்கேரி, பிலிப்பைன்ஸ், துருக்கி, வெனிசூலா இதற்கு நடப்பு உதாரணங்கள். இங்கே ஆட்சியாளர்கள் முதலில் பெரும்பான்மை வலிமையுடன் ஆட்சிக்கு வருகிறார்கள், பிறகு பொதுக்கருத்துகள் மூலம் தங்களுடைய சட்டங்களுக்கு மக்களிடம் ஆதரவைப் பெற்று அரசமைப்புச் சட்டத்தையும் தேர்தல் சட்டத்தையும் நடைமுறைகளையும் மாற்றி எதிராளிகளை வலிமையிழக்கச் செய்கின்றனர் அல்லது தங்களுடைய ஆட்சியைத் தொடர வழி காண்கின்றனர்.

லஞ்சம் தருவது, எதிர்ப்பவர்களில் மக்களிடம் செல்வாக்கு உள்ளவர்களைத் தங்களுடன் சேர்த்துக்கொள்வது, சிலரை தொடர்ந்து குறிவைத்து ஒழிப்பது, வரி ஏய்ப்பு சோதனைகள் என்ற பெயரில் நிம்மதி இழக்க வைப்பது, சொல்பேச்சைக் கேட்கும் நீதித் துறை மூலம் நடவடிக்கை எடுப்பது, இதர அரசு முகமைகள் மூலம் சட்டப்படியே அலைக்கழிப்பது, விமர்சகர்களையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் மிரட்டி ஒத்துழைப்பைப் பெறுவது என்று செயல்படுவது.

இவற்றில் பல அம்சங்கள் இந்தியாவிலும் இப்போது நிலவுகின்றன. புகழ்மிக்க அல்லது போற்றத்தக்க எந்த இந்திய ஜனநாயக அறிஞரும், மோடி தலைமையிலான அரசு ஜனநாயகமானதுதான் என்று விருப்பத்துடன் ஒப்புக்கொள்ள மாட்டார். ஜனநாயக நடைமுறைகள் இந்தியாவில் எந்தக் காலத்திலும் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை என்றாலும், ஜனநாயக நாடு என்பதற்கான குறைந்தபட்ச இலக்கணத்துக்கும் கீழே சரிந்துவிட்டது இன்றைய நிலை.

ஜனநாயகம் தொடர்பாக வரையறுக்கும் இரண்டு உலகளாவிய அமைப்புகளின் தரப்படுத்தல் இதைத் தெரிவிக்கின்றன. மேற்கத்திய நாடுகள் உருவாக்கிய இந்த உரைகல் முறை உண்மையை வெளிப்படுத்தப் போதுமானவை அல்ல என்றாலும், ஒரே நாடு வெவ்வேறு காலகட்டங்களில் எந்த அளவுக்கு ஜனநாயகத்தைக் கடைப்பிடித்தது என்பதை அறிய இவை உதவுகின்றன. ‘இந்தியா ஓரளவுக்குத்தான் சுதந்திர நாடு’ என்று ‘ஃப்ரீடம் ஹவுஸ்’ என்ற அமைப்பு கூறுகிறது ‘விடெம்’ என்ற அமைப்போ, ‘தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகார நாடு’ என்கிறது.

சுதந்திரமற்ற கருத்துகள், மக்கள் ஆதரவு, பேரினவாதம், இனவாத ஜனநாயகம், பாசிஸம் என்பவை இந்தியாவில் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதில்தான் இவ்விரு அமைப்புகளின் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றனவே தவிர, ‘இந்தியாவில் ஜனநாயகம் இல்லை’ என்பதில் அவர்கள் ஒத்துப்போகின்றனர்.

‘போட்டி சர்வாதிகாரம்’ என்ற புதிய கருதுகோள் இந்த வகையில் நமக்கு, நம்முடைய ஜனநாயகத் தன்மையை உணர உதவுகிறது. ஜனநாயகக் கட்டமைப்பு மாறவில்லை, அப்படியே நீடிக்கிறது, தேர்தல் களப் போட்டிகளும் கேலிக்கூத்தாகவில்லை, சில மோசடிகள் இருந்தாலும் ஆளுங்கட்சியும் அவ்வப்போது மாநிலங்களில் தோற்றுக்கொண்டிருக்கிறது.

அதேசமயம், ஜனநாயக அமைப்புகளின் தனித்தன்மை, சுதந்திரம், அதிகாரம் ஆகியவை திட்டமிட்டே தகர்க்கப்படுவதும் தொடர்கிறது. எனவேதான் ஜேம்ஸ் மனோர், ராகுல் முகர்ஜி போன்ற அறிஞர்களும் நானும் ‘போட்டி சர்வாதிகார வகையில்’ இந்தியா இருப்பதாகக் கூறுகிறோம். ‘போட்டி சர்வாதிகாரம்’ என்பது உலகமெங்கும் ஒரே மாதிரியான தன்மைகளுடன் இல்லை, நம் நாட்டில் நம் மண்ணுக்கே உரிய சில தனித்துவ அம்சங்களும் இதில் இருக்கின்றன.

அந்த தனித்துவ அம்சங்களில் ஒன்றுதான் நமக்கு நம்பிக்கையை ஊட்டிக்கொண்டிருக்கிறது. மேலே பார்த்த நாடுகளைப் போல அல்லாமல் இந்தியர்களின் மனங்களில் ஜனநாயக உணர்வு ஆழமாக வேரோடியிருக்கிறது. இந்திய மக்கள் நெருக்கடிநிலையைப் பார்த்தவர்கள், ஜனநாயகத்தை இழந்தவர்கள் - பிறகு அதை மீட்டவர்கள். ஜனநாயகம் என்றால் என்னவென்று அதன் சுவையை அனுபவித்த இந்தியர்கள் அதை மீண்டும் இழக்குமாறு விட்டுவிட மாட்டார்கள். துருவ் ரத்தியின் காணொலி இந்த அளவுக்குப் பிரபலமானதற்கு இதுவும் ஒரு காரணம்.

(நன்றி: அருஞ்சொல்)

காலைக்கதிர் Kalaikkathir

# தென்னைகளில் வெண் ஈ தாக்கம் வடக்கு மாகாணத்தில் அதிகரிப்பு

வடமாகாணத்தில் நிலவும் வெப்பமான காலநிலையைத் தொடர்ந்து. தென்னை மரங்களில் வெண் ஈ தாக்கம் அதிகரித்து வருகிறது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இதன் தாக்கம் அதிகரித்து வருகிறது .கிளிநொச்சி அம்பாள் பகுதியில் இதன் தாக்கத்தை அவதானிக்க முடிகிறது தென்னை ஓலைகள் கறுப்பு நிறமாகி கருகி செல்கின்றன. வெண்ணிற ஈ பறந்து திரிவதையும் அவதானிக்க முடிகிறது.

செய்கையாளர்களின் குரல் பதிவு மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு பொறுப்பான முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் ஊடக சந்திப்பும் உள்ளது .(05 - 113)

# போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கல்முனையில் வீடுகள் கையளிப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை நடைபெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் 2023 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 34 பயனாளிகளுக்கு இந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 10 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த வீடுகளை முதற்கட்டமாக பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் பிரதம அதியாக கலந்து கொண்டு வீடுகளை திறந்து பயனாளிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் தொழில்நுப்ப உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீரங்கன் உட்பட பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)

## நாடகப் பயிலகம் புதிய பிரிவு ஆரம்பம்

*நாடகக் கலையின் மேம்பாடு கருதி செயல்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 09.03.2024 சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.*

*இப்பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தின் தரம்11,12,13 களில் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்துகொள்ள முடியும்.*

*ஆறுமாதங்களைக் கொண்ட இப்பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் சனி,ஞாயிறு தினங்களில் பி.ப.3.30 மணிதொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.*

*இப்பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத்துணைக்கலைகள் ( வேடஉடை,ஒப்பனை,காட்சி விதானிப்பு,இசை,ஒளி விதானிப்பு), நாடகத் தயாரிப்பு,கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும்.*

*இப்பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தருவதன் மூலம் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (05)*

## பிரபல கண் வைத்திய அதிகாரி அல்அமீன் றிஷாத் காலமானார்



(அஸ்லம் எஸ். மௌலானா)

சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் கண் சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரியான டாக்டர் எம்.எம். அல்அமீன் றிஷாத் தனது 53 ஆவது வயதில் திங்கட்கிழமை இரவு காலமானார்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த இவர் கொழும்பு பொது வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் நீண்ட காலம் பணியாற்றி அத்துறையில் நிபுணத்துவம் பெற்றிருந்ததுடன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை என்பவற்றிலும் கடமையாற்றியிருந்தார்.

கொரோனா தொற்று இடர் காலப்பகுதியில் சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்ற இவர் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுதுவதில் அரப்பணிப்புடன் சேவையாற்றியிருந்தார்.

சாய்ந்தமருது ஜ/ம் ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினராகவும் மற்றும் சில பொது அமைப்புகளிலும் அங்கம் வகித்து பிரதேச, சமூக நலன் சார்ந்த விடயங்களிலும் இவர் முன்னின்று பணியாற்றி வந்தார்.

அவரது ஜனாஸா திங்கட்கிழமை நள்ளிரவு சாய்ந்தமருது அக்பர் பள்ளிமையவாடியில் பெரும் திரளான மக்கள் முன்னிலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(05)

## கிரிக்கெட் போட்டிகள்

*(அஸ்ஹர் இப்றாஹிம்)*

*சாய்ந்தமருது ஸஹிறியன் கிரிக்கெட் அகடமியால் றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி நிதியத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இளையோருக்கான ரி 20 கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை தலைவர் சரிப் ஹகீம் தலைமையில் சாய்ந்தமருது பொது மைதானத்தில் நடைபெற்றது.*

*இந்த இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது சஹி ரியன் இளையோர் அணியினரும் ஏறாவூர் யங் ஹீரோஸ் இளையோர் அணியினரும் மோதிக்கொண்டனர். இதில் ஏறாவூர் யங் ஹீரோஸ் இளையோர் அணியினர் வெற்றி பெற்றனர்.*

*இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை லெயிட்ஸ் நிறுவனத் தலைவர் ஆதம் லெப்பை, றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி நிதியத்தின் பிரதித் தலைவர் சுஹைல் ஜமால்தீன், திடீர் மரணவிசாரணை அதிகாரி அல் ஜவாஹிர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (05)*

## தேசிய ரீதியில் சாதித்த அல்-அமீன் வித்தி. மாணவர்களுக்கு எம்.எஸ்.தௌபீக் வாழ்த்து



தேசிய ரீதியில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான உதைப்பந்தாட்ட போட்டில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட வாழ்த்து அறிக்கையில் -

திங்கட்கிழமை கொழும்பு சுகதாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற அகில இலங்கை ரீதியான (ரி20) க்கான கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியினை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு எமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த திஃகிண்ஃ அல் - அமீன் வித்தியாலய மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களை வழிநடத்திய பாடசாலை சமூகத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார்.

மேலும், திருகோணமலை மாவட்ட பாடசாலைகள் தேசிய ரீதியில் பல சாதனைகளை நிகழ்ந்த வேண்டும் எனவும், அதற்கு தன்னால் முடிந்த அனைத்து பக்களிப்புக்களையும் வழங்க தயாராக இருக்கிறேன் என்றும் அவரது அறிக்கையில் தெரிவித்தார்.

(05)

## ஊடகவியலாளரின் தந்தை காலமானார



மட்டக்களப்பு மாவட்ட சீலாமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் திருமதி துஷ்யந்தி சுரேஸ் (மட்டு. துஷாரா) அவர்களின் தந்தை த.நடராசா என்றழைக்கப்படும் நவம் ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார். அன்னார், இலங்கை போக்குவரத்துச் சபையின் ஓய்வுநிலை நடத்துனராவார். அவர், கோவில் பரிபாலன சபையின் தலைவராகவும், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தின் செயற்பாட்டாளராக மிக நீண்ட காலம் செயற்பட்டதுடன் தொழிலாளர்களின் நலன்களுக்காகவும் முன்னின்று செயற்படும் ஆளுமையுள்ள இரும்பு மனிதனாகவும் திகழ்ந்தார்.

குறிப்பாக, உள்ளூர் மற்றும் உலக நிலைவரங்களைக் கூர்ந்து அறியும் அறிவாளனாகவும், அவரது பிள்ளைகளை நன்கு கற்பித்து நல்லாளுமையுள்ளவர்களாக உருவாக்கிய சிறந்த தகப்பனுமாவார். (05)

## 'முதற்குடி மகன்' நூல் வெளியீடு

(எம்.எச்.எம் சியாஜ்)

மறைந்த முன்னால் கால்நடை வள பிரதி அமைச்சரும் புத்தளம் நகர பிதாவுமான மர்ஹூம் கே.ஏ பாயிஸ் இன் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களின் தொகுப்பாக அவரின் பிரத்தியேக செயலாளரான எம்.எஸ் அப்பாஸ் எழுதிய 'முதற்குடி மகன்' என்ற நூல் நாளை (வியாழக்கிழமை) புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இந் நூல் வெளியீட்டு நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினரும் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமின் பிரசன்னத்தோடு நடைபெற உள்ளமை விசேட அம்சமாகும். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அடுத்த ஆண்டும் இதே அரசுதான் இந்த நாட்டில் நிலைத்திருக்கும்

## நம்பிக்கையூட்டுகிறார் ஜனாதிபதி

அடுத்த வருடமும் நாட்டில் இதே அரசாங்கம் அமையும் எனவும் அரசாங்கத்தின் மக்கள் பிரதிநிதிகள் கிராமத்திற்கு செல்லாவிட்டால் அரசாங்கமே இல்லாமல் போகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இரண்டு வருடங்களின் பின்னர் அபிவிருத்திக்காக வழங்கப்படும் பணத்தை கிராமத்திற்கு எடுத்துச் சென்று கிராமத்தின் அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்குமாறும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

கம்பஹா மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் திடீரென கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பில் கம்பஹா மாவட்ட மொட்டுக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய மூன்று மாவட்டத் தலைவர்களும் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.

இதில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தவிர அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் அரசாங்கத்தை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சிசிர ஜயகொடி மற்றும் மிலன் ஜயதிலக்க ஆகியோர் வெளிநாட்டில் இருப்பதால் இந்த சந்திப்பில் பங்கேற்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் -

'1978 இல்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் வழங்கத் தொடங்கினர். அப்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு கடமையைச் செய்வதற்கு மூன்று லட்சம் ரூபா கிடைத்தது. ஒரு கிராமத்தை அபிவிருத்தி செய்ய பணம் தேவை. குறிப்பாக இந்த வேலையை தாங்கள் தாங்கள் பகுதியில் தொடங்குங்கள். இங்கு பிரதேச மட்டத்தில் கிராமத்திற்கு செல்வது மட்டுமே நோக்கமாக உள்ளது. அன்று போக முடியவில்லை என்பதால், இப்போது கிராமத்திற்குச் சென்று வேலை செய்ய நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. கிராமத்தை விட்டு யாரும் ஒதுங்கக் கூடாது. கம்பஹா எங்கும் செல்லலாம், யாரும் செல்ல முடியாத இடம் இல்லை. பணத்தை எடுத்து செலவு செய்யுங்கள். ஓகஸ்ட் மாதத்திற்கு முன் பணத்தைச் செலவளித்து வேலையைத் தொடங்குங்கள். தள்ளிப் போட வேண்டாம். அடுத்த வருடம் பணம் தருவேன். அடுத்த ஆண்டும் இதே அரசாங்கம்தான். கிராமத்திற்கு செல்லாவிட்டால் அரசு காணாமல் போய்விடும்.

1970 இல் கம்பஹா மாவட்டத்தை உருவாக்கினோம். அதன்பின்னர் எந்த அரசாங்கம் வந்தாலும் கம்பஹா பெரிய முன்னேற்றம் அடைந்தது. இன்று அதிக மக்கள் தொகை கம்பஹா மாவட்டத்தில் உள்ளது.இது வேகமாக வளர்ச்சியடைந்தது. 1978 இல் இருந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கமும் அரசாங்கத்தை நிர்வாகம் செய்த கட்சிகளும் செய்தன. அதிலிருந்து விலகியிருந்தவர்கள் எதுவும் செய்யவில்லை. தொலைவில் இருந்தவர்கள் கம்பஹாவை கட்டி எழுப்பவில்லை. இல்லை என்றால் இன்று தேங்காய், இறப்பர் மட்டும்தான் இருந்திருக்கும். அதையும் அந்த மக்களிடம்தான் கேட்க வேண்டும். நீங்கள் இணைப்பில்லாமல் இருந்திருப்பீர்கள் என்றால் என்ன நடந்திருக்கும்? இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டதால்தான் கம்பஹா கட்டி எழுப்பப்பட்டது. அதை யாரிடமாவது கேளுங்கள். இரண்டு கட்சிகளும் இணைந்து செய்த பணிகளுக்கு கம்பஹா சிறந்த உதாரணம். எதுவும் செய்யவில்லை என்று மற்றவர்கள் கூறினால், கம்பஹாவுக்கு வந்து பார்க்கச் சொல்லுங்கள். - என்றார். (05)

# தந்தையை இழந்த மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

## முஷாரப் எம்.பி.



(வி.ரி. சகாதேவராஜா)

மாளிகைக்காட்டு கிராமத்தில் தந்தையை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் வழங்கி வைத்தார்.

சமூக அபிவிருத்தி சபையின் 08 ஆவது வருடாந்த நிறைவு விழா அதன் ஸ்தாபக தலைவரும் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் உதவித் தவிசாளருமான ஏ.எம்.ஜாஹீர் ஜே.பி. தலைமையில் இடம்பெற்றது .

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக தொழில் அதிபர்களான எம்.எம்.ஆசாத் றஹீம் , ஏ.ஏ. அஷ்ரப் அலி கலந்து சிறப்பித்தார்கள்.

இதன் போது சிறப்பு அதிதிகள் இருவருக்கும் அமைப்பின் பணிப்பாளர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது சிறப்பம்சமாகும். அதிதிகளுக்கு அமைப்பின் அங்கத்தவர்களால் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அத்துடன் தந்தையை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டதோடு அமைப்பில் திறமையாக செயற்பட்டவர்களுக்கு கௌரவிப்பும், பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு மார்ச் 8

*உழைக்கும் மக்கள் விடுதலை நோக்கிய பெண் விடுதலைப் பயணத்தில் மார்ச் 8 சர்வதே உழைக்கும் மகளிர் தினத்தின் 113 வது ஆண்டினை யாழ்ப்பாணம் , நுவரேலியா, கொழும்பு, மாத்தளை, வவுனியா பிரதேசங்களில் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு பல்வேறு நிகழ்வுகள் ஊடே நினைவு கொள்கின்றது.*

*மார்ச் 8 ஆம்திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை முருகையன் கேட்போர் கூட மண்டபத்தில் இணைச் செயலாளர் பி.பிரசாந்தினி தலைமையில் கூட்டம் இடம் பெறுகிறது.*

*இந்தக் கூட்டத்தில் 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் பெண்களின் நிலையும்' என அமெரிக்க மசாசூட்*

*பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு மாணவி நியந்தினி கதிர்காமர் உரையாற்றுகிறார். மேலும் ஆசிரியரும் எழுத்தாளருமான சிறிலேகா பேரின்பகுமார் 'மாண்புறும் மாதவி' என உரையாற்றுகிறார்.*

*இந்தக் கூட்டத்தின் சிறப்பு நிகழ்வாக வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய 'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புகள்' எனும் நூலின் அறிமுக நிகழ்வு இடம்பெறுகிறது.*

*பெண்விடுதலைச் சிந்தனை அமைப்பின் இணைச் செயலாளர் மோகனதர்சினி அறிமுகவுரையை நிகழ்த்துவார். பதிலுரையினை வள்ளியம்மை வழங்குவார்.கருத்துரையினை சி.கா.செந்திவேல் வழங்கவுள்ளார். அனைவரையும் பங்கு கொள்ளுமாறு பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு அன்புடன் அழைப்பு விடுத்துள்ளது.*

*(05)*

# ஜிப்ரியின் 4ஆவது நினைவு தின நூல் அறிமுக நிகழ்வும்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பங்கேற்பு

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சிரேஷ்ட ஒலி -ஒளிபரப்பாளர் மர்ஹூம் ஏ.ஆர். எம்.ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், 'ஏ.ஆர். எம்.ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாளிகைக்காடு, பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி - ஒளிபரப்பாளர் யூ.எல்.யாகூப் தலைமையில், சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஷஹிலா இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் எஸ்.கலையரசன் உட்பட முன்னாள் உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள், மர்ஹூம் ஜிப்ரியின் குடும்பத்தினர், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுவாமி விபுலானந்தர் பிறந்த இல்லத்திற்கு திருகோணமலை ஆசிரியைகள் விஜயம்!







(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் பிறந்த இல்லத்திற்கு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91ஃ 92 அணியினரின் திருகோணமலை ஆசிரியைகள் வாழ்க்கையில் முதல் முறையாக விஜயம் செய்தனர்.

திருகோணமலை ஆசிரியைகளான சசிகலா, இந்திராணி, நளினி , குமுதினி மற்றும் சுகுணமதி(மட்டக்களப்பு) டில் பிரபா(கோட்டைக்கல்லாறு) ஆகியோர் வாழ்க்கையில் முதல் முறையாக விஜயம் செய்து பார்வையிட்டனர்.

இதன் போது விபுலானந்த அடிகளாரின் பிறந்த இல்லம், அரும் பொருள் காட்சியகம், பிரார்த்தனையகம், மணிமண்டபம், திருவுருவ சிலைகள் போன்றவற்றையும் பார்வையிட்டார்கள்.

கிழக்கில் பிறந்த பெரும் மகான் ஒருவரின் பிறந்த இல்லத்தை வாழ்க்கையில் முதல் முறையாக இப்போதாவது பார்க்கக்கிடைத்தமை ஒரு பாக்கியமே என்று அவர்கள் கருத்துரைத்தனர். மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91 ஃ92 அணியினரின் புலன அணியின் தலைவர் வீ.ரி. சகாதேவராஜாவும் ,ஓய்வு நிலை பொறியியலாளர் எஸ். அருள்பிரகாசமும் கலந்து கொண்டனர். (05)

## தொழில் முனைவோர் விருது பெற்றார் பிஸ்ரியா

(ஹஸ்பர் ஏ.எச்)

தேசிய மட்டத்தில் சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருதினை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் முள்ளிப்பொத்தானையை சேர்ந்த எம்.ஆர்.எம். பிஸ்ரியா பெற்றுள்ளார்.

இலங்கை மகளிர் தொழில் துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் நடத்திய சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருது விழாவில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பெண் தொழில் முயற்சியாண்மையாளர்களில் கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

குறித்த விருது வழங்கும் விழா கொழும்பில் அண்மையில் (27.02.2024)இடம் பெற்றது இதன் போது ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி இவரை பாராட்டியதுடன் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர்,மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

## டாக்டர் அல் அமீன் றிசாத்தின் இழப்பு தாங்க முடியாத துயர்

### ஹரீஸ் எம்.பி. அனுதாபம்

(நூருல் ஹுதா உமர்)

எனது வகுப்பு தோழர் டாக்டர் அல் அமீன் றிசாத் காலமான செய்தியறிந்து பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளேன். சாய்ந்தமருது மண்ணில் பிறந்த என் நண்பர் டாக்டர் அல் அமீன் றிசாத் கண் விசேட மருத்துவ நிபுணராக திகழ்ந்து நாட்டின் பல்வேறு பாகங்களிலும் சேவையாற்றி தனது பிறந்த மண்ணுக்கும் சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்து சுகாதார மேம்பாட்டுக்கும் கடுமையாக உழைத்தவர் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும், சாய்ந்தமருது ஜ/ம்மா பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தில் உப தலைவராக இருந்து சாய்ந்தமருது மண்ணின் அபிவிருத்தி, முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்தவர். எனது வகுப்பு தோழன் என்ற உரிமையுடன் எனக்கு அவர் முன்வைத்த ஆலோசனைகள் என்றும் மறக்க முடியாதவை.

எனது முன்னேற்றங்களில் உளமார மகிழ்ந்து வாழ்த்தியதுடன் எனது உடன்பிறவா சகோதரன் போன்று எனது சுக, துக்கங்களில் பங்கு கொண்ட எனது நண்பன் டாக்டர் அல் அமீன் றிசாட் அவர்களின் இழப்பு செய்தி என்னுள் தாங்க முடியாத கவலையை தோற்றுவித்துள்ளது.

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை 1990 பிரிவு மாணவ நண்பர்களை ஒன்றுதிரட்டி ஒருங்கிணைத்து தலைமை தாங்கிய நண்பன் டாக்டர் அல் அமீன் றிசாட் சிறந்த முறையில் நட்பு பாராட்ட கூடியவர் என்பதுடன் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்தார்.

மேன்மையான சுபாவம் கொண்ட அவர் மக்களை தனது அன்பான போக்கால் அரவணைத்தவர். மட்டுமன்றி எங்களின் நண்பர் வட்டத்திலும் நன்மதிப்பைப் பெற்றவராக திகழ்ந்தார். அவரின் இழப்பால் துயறுற்றுள்ள அவரின் மனைவி, மக்கள், உறவுகள், நண்பர்கள் எல்லோருக்கும் இறைவன் ஆறுதலை வழங்கிட பிரார்த்தனை செய்கிறேன்.

எனது நண்பனின் நல்லமல்களை, சமூக பணிகளை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக்கொள்ளவும், மறுமை ஈடேற்றத்திற்காகவும் அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயரிய சுவர்க்கம் கிடைத்திடவும் இருகரமேந்தி பிரார்த்திக்கிறேன். (ஆமீன்) என்று தெரிவித்துள்ளார்.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2024இல் வெளியிடப்பெற்றது.